KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு ஜூலை மீ 25 உ [No. 29

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 449
2. நம்மாழ்வார் வைபவம் (8-ம் பத்து, 1-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 451
3. கம்பராமாயணம் (நாடவிட்ட படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 452
4. அணியிலக்கணம்
உடனிகழ்ச்சியணி 455
5. ஒத்தெல்லோ (அங்கம் 3. களம் 3.)
Shakespeare's-'Othello' 456
6. வில்லிபாரதம் (கண்ணனல்லால் தெய்வமில்லை)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 459
7. கலித்தொகை (மருதக்கலி 13, 14,)
T. A. கனகசபாபதி முதலியார் 461
8. வர்த்தமானம் 464

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ 3.

இலக்கணம் ஈதென்றியம்பி வரையறுத் துரைக்க மாட்டாத் தன்மையதாயினும், அவ்வித்தகம் என்னுஞ்சொல் விளக்கவல்லவற்றை இன்னுஞ் சற்றுத் தொடர்வோம்.

தன்னையே தான் அறிந்துகொண்ட ஒருவனை வித்தகனென்று அழைப்பர். இது பிழையன்றெனினும் முற்ற முடிந்த உண்மையுமன்று. ஏனெனில், நம்முடைய இருக்கையைப்பற்றிய நிச்சய உணர்வை நாம் எய்தியவுடன் 'இவ்வுணர்விற்கும்அப்பாலாய ஆழத்தில் கிடக்கின்றது வித்தகம்' என்னத் தெரிந்துகொள்கின்றோம். ஆதலின், அறிவின் வேகம் வேறு, வித்தகத்தின் ஆழம் வேறு. தன்னறி வில்லாமை முழுமூடம்; அஃதிருத்தலைச் சிற்றறிவென்றும், அதற்குந் தான் அப்பாலாய வித்தகத்தைப் பேரறிவென்றும், ஒருவாறு இக்கட்டுரையின் நிமித்தம் வகைப்படுத்தி அழைக்கலாம்.

தன்னறிவின் ஆழத்தில் நிகழ்வது வித்தகம் என்று கூறினோம். இக் கருத்தை நன்கு தேர்தல்வேண்டும். "அறிதோறும்அறியாமைகண்டற்று" என்னுமத்திப்பியச் சூத்திரமித் தன்னறிவின் திறத்திலும்செல்லும். பொதுவாக, மனிதருக்குத் தம் வாழ்வில் நிலைத்து அமிழ்ந் தநினைவில்லை; மேலெழுந்தபரப்பிலேயே மிதக்கின்றார்களென்னலாம். இன்னபிறப்பு, இன்னபெயர், இன்னதொழில், இன்னவிலாசம், இவ்வளவு பணம், இத்தனை மக்கள், இதுவயது, என்று இவ்வகைப்பல புறப்பொருள்களைச் சார்ந்ததுதான் மனிதன் தன்னை நினைத்துக்கொள்ளும்வழக்கமுடையவனேயல்லாமல் அடைமொழி யாதுமின்றி "நான் இருக்கின்றேன்" என்னுமொரு நிரந்தரஉள்ளெண்ணம்சிறந்தெழவாழ்பவர் மிகச்சிலரேயாகின்றனர். மற்றவைகளுடன்சார்த்தியே தன்னை மனத்துட்கொள்ளுமவ் வியல்பினைத் தன்னினைவு என்றும், அவைகளைச் சாராமல், தான் இருக்கின்ற தன்மையைமட்டும் சிந்தையாற்றெளிந்து அத்தெளிவிற்கேற்ப நிலைநிற்றலைத் தன்னறிவுஎன்றும் வேறுபிறித் துணர்ந்தக்கால் விடயம் விளங்குவது பலபடி எளியதாகும். தன்னினைவு என்பது Self - conceit எனவும், தன்னறிவு என்பது Self-knowledge எனவும் ஆங்கிலத்தொடர்களால் குறிக்கப்படும். எப்படித் தன்னினைவுதான் தன்னறிவுஆகாதோ, அவ்வாறே, தன்னறிவுதானும் வித்தகம் Wisdom ஆவதில்லை. ஆயினும் இம்மூன்றிற்கும் ஓர்தொடர்புளது. நோயினாலேனும் சித்தப்பிரமை பித்தம் முதலியவைகளாலேனும் தன்னினைவு பெறலாற்றா ஒருவனுக்குத் தன்னறிவு தோன்றுமாறு மில்லை. அங்ஙனமே, தன்னறிவு தோன்றாக்கால் வித்தகம் சுரப்பதற்கும் இடமில்லாமற் போகின்றது. ஆதலாற்றான், தன்னறிவினாழத்தில் நிகழ்வதே வித்தகம் என்னலானோம்.

இதனையே, தன்னறிவின் வளர்ச்சியே வித்தகத்தில் கொண்டுசேர்க்கின்றது, என்றாலும் ஏற்றதாகும். தன்னறிவு பெற்றவளவிலேயே நின்றுவிடுவீதால் எய்தும்

பயன்பெரிதொன்றும்இல்லை. ‘நான் இருக்கின்றேன்’ என்னுந் தனியறிவு வளரவளர, அவ்வறிவினைக்கொண்டு துருவி ஆராயப் பயிலுமிடத்துத் தன்னுடைய தன்மையின்மெய்ம்மைதெரியமாட்டாவோர்அறியாமை மெல்லமெல்லப் படர்ந்து அவ்வறிவைச்சூழ்ந்து கொள்ளத் தலைப்படுவது விலக்கரிய வரன்முறையாகி விடுகின்றது. ஆதலின், தன்னறிவின் முக்கியமான இலாபம் யாதெனின், அதுதான், தன்னினும்உயர்ந்ததோர் பருப்பதமனைய அறியாமையின் உன்னதசிகரத்திற்கு நம்மைஆற்றுப்படுத்துவதேயன்றிப்பிறிதொன்றில்லை. அவ்வறியாமையின் சிகரத்தினதகத்தே மெய்யாய வித்தகத்தின் தூயதண் ஊற்றுக்கள் பொங்கிப் பெருகிப் பொலிகின்றன. தன்னறிவு என்பது சிற்றறிவேயாக, அவ்வறிவுகொண்டு தெளிந்தஅறியாமையே வித்தகம் என்னும் அம்மெய்யாய பேரறிவாகிவிடுகின்றது. வாய்மைக்கிணங்கி வாதிக்க வல்லார்முன், அறியாமையையே அறிவென்றழைக்கும் இவ்வாசகத்தில் அமைந்துள்ளதுபோல் தோன்றும் முரண், கணமேனும் நில்லாமல் அழிந்துபோம்;விபரிதம் யாதும் இல்லாமை விளங்கவரும்.

எனின், முழுமூடமும் முற்றிய அறிவும், இறுதியில் அறியாமை என்னும் அவ்வொன்றில் ஒக்கமுடிகின்றனவே; அறியாமையேநமதுபிறப்பியல்பும்,பெறவல்ல உரிமையும் ஆயின் அதனை இப்படிச்சுற்றிவளைத்துத் தொடுவானேன், என்றஐயம் எவர்க்குமே எளிதிற் றோன்றலாமெனினும் அவ்வளவு எளிதிலேஅதற்கு ஆளாகவுங்கூடாது. முதல் இருந்தஅறியாமைக்கும் பின்விளைந்த அறியாமைக்கும்,இருளிற்கும் ஒளியிற்கும் இடையே யுள்ளதோர் வேற்றுமை யுளது. பாமரனொருவனுந் தன்னையறியான்,பரிணதன் ஒருவனுந் தன்னையறியான், உண்மையே. எனினும், பாமரனோ தன்னை அறிந்துகொள்ளும்வகை நாடவேண்டும் என்பதுவும் அறியானாக, பரிணதனோ ‘என்னுடைய தன்மையை அறிய வல்லேனல்லேன்’ என்பதை அறிந்தவனாவான். முன்னைய அறியாமை சிற்றறிவிற்குள்ளடங்கியது, பின்னறியாமையோ அச் சிற்றறிவிற்கு அப்பாலாயது. மன்பதைத்தொகுதியிற்பெரும்பகுதியோர் இவ் வெல்லையைக் கடத்தலென்பது மிகவும் அரியதே; மற்று, மெய்யறிவின்பால் மனம்வைத்த மேன்மையோர் இவ் வரணைக் கடப்பதற்குரிய புதிய வழிகளை இடைவிடாமல் முனைந்து தேடுபவராவார். ஒருவன், மெய்யன்பு பூண்டொழுகும்நெறியினால் மனிதர் எய்தவல்ல தன்னறிவின் முழுமையையும் எய்திவிடுவானாயின், பிறகு, அறியாமையின் புதியதோர் ஒளிபெற்று அவ்வன்பு விளங்குவதாகும். சாதாரண அன்பினைச்சூழ்ந்து இருட்டும் அறியாமையின் இது முற்றிலும் வேறாயது. இப் பின்னைய அறியாமை மிருகத்தினைச் சூழ்ந்து தழுவிக்கொள்ளும் பெற்றியது; முன்னையதோ கடவுளிற்கருகே நம்மை அழைத்துக் கொண்டுபோய் விடும். என்றென்றும் பாமரனேனும் பரிணதனேனும் எவ்வெவரும் அறியாமையிற்றானே உறையவேண்டியவர்கள் என்பது நிச்சயம்;இதிலோர் சந்தேகமில்லை; அறிஞர்என்றபெயரிற்குரியவர்களெல்லாரும், கிரேக்கதேய ஸாக்ரடீஸ் போலவும், உரோம மன்னவன் மார்க்கஸ் அரீலியஸ் போலவும், அறிதோறும் அறியாமை காண்பதே உலகறி கொள்கையென உவமையாய்க்கொண்டநம் மாதாநுபங்கி போலவும், “யாம் அறியேம், யாம் அறியேம்” என எதிர்முறையிட்டு விளம்புவார். நூலனைத்தும் நுனித்துணர்ந்த நிடததேயத்தவர்களும்,வரிவளையார் தங்கள் மருங்கேயன்றியும் தமக்குத் தெரியாதன சில உளவென்பதை மறுக்கமாட்டர்;புகழேந்திப்புலவரே அதைமறைத்துவிட்டார். இன்னணம் எத்திறத்திலும் நாம்அவ்வறியாமையாற்றான் சூழப்பெறுகின்றோமாயினும்,அவ்வறியாமையை அறிந்துகொள்ளும் நலத்தினால் அதனை மேன்மேலும் தூய்மைபெறச் செய்கின்றவர்களாகின்றோம். இத் தூய்மையின்பால் நம்மைத் தூண்டுகின்ற அந்நன்னிலை வித்தகத்தின் விளக்கமாம்.

முன்னின்ற அறியாமை மூடமென்றும், அம்மூடமழிய வளர்கின்ற தன்னறிவு சிற்றறிவென்றும்,அத்தன்னறிவின்வளர்ச்சியால் பின்வந்தெய்துகின்றஅறியாமையே வித்தகமென்னும் பேரறிவென்றும் இதுகாறும் விளக்கிக்காட்டினோம். இதனிடையே, பகுத்தறிவென்னும் மற்றொருவகை அறிவினிடத்தும் நம் சோதனையைஇப்பொழுதுசெலுத்தவேண்டிவருகின்றது. பகுத்தறிவு என்னும் இதனை ஆங்கிலத்தில் reason என்னுஞ்சொல் குறிக்கும்.

கண்டதே காட்சியெனப் புலன்கள் புகட்டும் அறிவைக்கடந்து எப்பொருட்கும்மெய்ப்பொருள் காண்பதற்கு உதவிசெய்கிறகருவியாயமைவது பகுத்தறிவு. “சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ, நன்றின்பா லுய்ப்ப தறிவு” என்றவிடத்து வள்ளுவனார் இப்பகுத்தறிவையே மனத்துள்வைத்துப் பேசுகின்றார். புலன்வழி மனத்தைச்செல்லவிடாமல், நல்லதுந்தீதுமோர்ந்து நன்மையின்பாற் செலுத்துவது பகுத்தறிவின் இலக்கணமும் காரியமுமாகும்.புலன்கள் தூண்டும் புல்லிய நினைவுகளை வெல்வான் பகுத்தறிவுடையவன். ஒன்றன் குணநாடிக் குற்றமுநாடி அவற்றுள் மிகைநாடி மிக்ககொளலும் பகுத்தறிவின்பாற் பட்டது. உற்றதுகொண்டு மேல்வந்து உறுபொருள்உணரும் கொள்கையும் அது. எனினும் இவைதாமே வித்தகம் ஆகா. புலன்களின் தூண்டல்களின்மீது இடைவிடாமல் கொள்கின்ற வெற்றியினும்மேலானதோர் நிலையாம் வித்தகம். இத்தகை பகுத்தறிவினோடு நின்றக்கால் நிலைக்கும்பயன் யாதுமில்லை. ஆதலின் பகுத்தறிவை மட்டுமே நாம் ஆராதித்திருப்பதால் வித்தக நன்னிலை அடைந்தவராகமாட்டோம்.இதனை, மாரிஸ் மேடர்லிங்க் என்பவர்,

"We shall not become wise through worshipping reason alone; and wisdom means more than perpetual triumph over inferior instincts. Such triumphs can help us but little if our reason be not taught thereby to offer profoundest submission to another and different instinct, that of the soul. These triumphs are precious, because they reveal the presence of diviner instinct, that grows ever diviner still. And their aim is not in themselves; they serve but to clear the way for the destiny of the soul, which is a destiny always, of purification and light.

எனவிளக்குகின்றவாக்கியங்கள் மிகவும் அருமையாய் அமைந்திருக்கின்றன. புலன்களின்வெற்றியோடு நிற்கின்ற பகுத்தறிவினற் பயன்தா னில்லையென்று யாம் இயம்பியதற்கு ஆதாரமாவதுடன் அது மேற்சென்றடையவேண்டிய அறியாமையாகிய அவ் வித்தகத்தின்காரியத்தையும் ஒருவாறுகுறித்தலால்இம்மேனாட்டறிஞர் மொழியினை இங்கெடுத்தெழுதினோம். வித்தகத்தை, மெய்யுணர்வு என்னுந் தொடரால் குறிக்கின்ற திருவள்ளுவர், புலன்களை வென்றுகொண்ட வெற்றியிற் பயனில்லை என்பதை,

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

என இயம்பும் குறளை நோக்குங்கால், மாரிஸ் மேடர்லிங்க் கொண்ட கொள்கை தக்கதே என்னும்நிச்சயம் பலபடி வலிவடைந்ததாகும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

8-ம் பத்து, 1-ம் தசகம்.

[442வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பாசுரம்

'ஆருயி ரேயோ அகலிட முழுதும்
படைத்திடந் துண்டுமிழ்ந் தளந்த
பேருயி ரேயோ பெரியநீர் படைத்தங்
குறைந்தது கடைந்தடைத் துடைத்த
சீருயி ரேயோ மனிசர்க்குத் தேவர்
போலத் தேவர்க்கு தேவாவோ
வோருயி ரேயோ உலகங்களுக் கெல்லா
முன்னைநா னெங்கு வந்துறுகோ.

குறிப்பு:—ஆருயிரேயோ - உயிருக்கும் உயிரே; (ஒ-துயரக் குறிப்பு.) அகலிடமுழுதும் - விசாலமான உலகங்களையெல்லாம், படைத்து - ஆதிகாலத்தில் சிருஷ்டித்து; இடந்து-ஜலார்ணவத்தில் தூக்கி நிறுத்தி, உண்டு - பிரளயகாலத்தில் திருவயற்றில் வைத்து ரக்ஷித்து, உமிழ்ந்து - பிந்தியும் யுகம் ஆரம்பிக்கும்போழ்து வெளிப்படுத்தி, அளந்த-மஹாபலி சக்கரவர்த்தி ஆக்கிரமித்துக் கொண்டதைத் தானமாக அளந்து வசப்படுத்திக்கொண்ட, பேருயிரேயோ - கருணைமிகுந்த மஹாத்மாவல்லவோ ? பெரிய நீர் படைத்து - அனைத்தையும் தாங்க ஆதாரமாக மஹாசமுத்திரத்தைச்சிருஷ்டித்துஅங்குஉறைந்து-க்ஷீராப்தியில் சயனஞ்செய்து, அதுகடைந்து-அதை அமிர்தம் கடைந்து (தத்போது மஹாலெக்ஷ்மியைத் தனக்காக ஸ்வீகரித்ததை ஆழ்வார் திருவுள்ளபட்டுச் சுட்டுவதாக கொள்ளலாம்) அடைத்து-அணைபோட்டுத் தடுத்து, (ஸீதாபிராட்டியின் நிமித்தம் என்று சுட்டிகாட்ட) உடைத்த - திரும்பியும் கட்டின அணையை நீரோட்டத்துக்கு வாட்டமாக ஏற்படுத்திய, சீர் உயிரேயோ-தங்கும் கீர்த்தியுடையவனே; மனிசருக்குத் தேவர்போலே தேவதைகளுக்கு மேலான தேவனல்லவோ நீ, உலகங்களுக்கெல்லாம், ஓர் - இணையில்லாத, ஆர் உயிர் - அருமையான சத்து ஸ்திதி பிரவர்த்தி இவைகளுக்குக் காரணமானவனல்லவோ; இவைகள்சரீரம்போன்றும் நீ அச்சரீரத்தைத்தாங்கி நடத்து மாத்மாபோலும், இப்படிப்பட்ட உன்னை, நான், எங்குவந்து உறுவன் - அடியேன் எனக்குச் சொந்தமான சுவல்ப யத்நத்தால் எப்படி வந்து அடைவேன்.

விசேஷ குறிப்பு:-பகவான் ஆழ்வாரை நீவிர் விஹிதமான உபாயத்தை அனுஷ்டித்தீரானல் அதுவே நம்மை யடைய ஏற்பதாகுமன்றோ? என்று வினவினதாசு உள்கொண்டு இப்பாசுரத்தில் இலக்குமிக்கும் ஸீதாபிராட்டிக்கும் இன்னம் பெரிய தேவதைகளுக்கும் அவரவர்கள் காரியசாத்திய நிமித்தம் அமைந்துஅமர்ந்து வேண்டுவனவற்றைச் சாதித்துத் தாவில்லையோ? நானகப்பட்டஸர்வலோகங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிற உன்னை யான் சுவயயத்நம் செய்தா அடையவேணும்? என்கிறார்.

6-ம் பாசுரம்

எங்குவந் துறுகோ வென்னை யாள்வானே
யேழுல கங்களும் நீயே
அங்கவர்க் கமைந்த தெய்வ நீயே
யவற்றவை கருமமு நீயே
பொங்கிய புறம்பால் பொருளுள வேலும்
அவையு மோர்நீ இன்னேயானல்
மங்கிய வருவான் நெற்பமு நீயே
வான்புல னிறந்ததும் நீயே.

குறிப்பு:—மூன்றாமடியில் "பொருளுளவேலும் அவையும்ஒ இனனேயானல்" என்று பாடபேதம்.

உரை—ஏழுலகங்களும் நீ - ஏழுலகங்களிலுள்ள எல்லாப் பொருள்களுக்குள்ளும் ஆத்மாவாய் நின்று அவைகளை நடத்தும் கடவுளும் நீ, அங்கு - அந்த உலகங்களில், அவர்க்கு அமைந்த தெய்வம் நீயே-அவ்வுலகத்தார்கள் வழிபடும் அக்நி இந்திரன் முதலான தேவர்களுக்கும் ஆத்மாவாக நீ சமைந்திருக்கிறாய். அவற்றவை கருமம் நீயே - அவர்கள் மேற்படி வழிபாட்டுக்கு அளிக்கும் பயனும் நீயே, பொங்கிய புறம்பால் பொருள் - புறம்பால் - உலகத்திற்கு வெளி இடங்களில், பொங்கிய-விசாலமாய் விருத்தியடைந்த, பொருள் - வஸ்துக்கள், உளவேலும் - இருந்ததேயாகிலும்,

குறிப்பு:-ஆழ்வார் எம்பெருமானின் குணாதிசயங்களில் ஆழ்ந்து ஈடுபட்டாலும் தத்துவசாஸ்திரத்தின் நோக்கங்களில் Philosophical teaching திருஷ்டிவைத்தே உரைக்கும் வழக்கத்தை யாமெழுதும் உரைகளில் அடிக்கடி வற்புறுத்தி யிருக்கின்றோம் - வேதாந்திகள் - வேதங்களே "சாஸ்திரயோநித்துவாத்" இறுதிப் பிரமாணங்களாகக் கொண்டவர் - இவர்கள் அண்டத்துக்கு வெளிப்பொருள்களும் பிரம்மசிருஷ்டியில் அகப்பட்டதென்று கொள்வார்கள். ஸாங்கியர்கள் பிருகிருதியின் பரிணாமங்கள்

மஹத் அகங்காரம்தத்வங்கள் ஸிருஷ்டிக்குக்காரணங்களென்று கொள்வார்கள்-தர்க்க பாஷையில் "துஷ்யதுதுர்ஜந:" எதிரி வாதே தத்துவமாகட்டும்" என்று சொல்வதுபோல் சாங்கியர்களின் கொள்கையே ஸத்தியமாகட்டு மென்பதாய் யாம் ஒப்புக்கொள்வோம்; அதில் நமக்குப் பாதகமில்லை; பிருகிருதி எப்படி மாறித்திரிந்து பரிணமித்தாலும் அவ்வண்ணம் ஏற்படும் பொருள்கள் பகவானின் ஆஞ்ஞைக்குள் பட்டனவென்று வேதப் பிரமாணங்கள் இருப்பதால் "அம்மாதிரி மாறுகின்ற பொருள்களெல்லாம் அவையும் நீ" "பகவானின் பரிணாமங்களே" என்று கொள்ளத் தட்டில்லை என்று "உறவேலும்" என்று ஐயமாகச் சாற்றியிருக்கிறபடி. மங்கிய - பிருகிருதியின் பந்தத்தில் அகப்பட்டு, அருவான் - உருவமில்லாத ஜீவாத்மாக்களின், நெற்பமும்-நுட்பங்களும், நீயே ஸூக்ஷ்மமான ஆத்மாவாக இருக்கிறாய். வான் - விண்ணுலகத்தில், புலன் - ஐம்புலன்கள், இறந்ததும் நீயே - அவிந்து சாவடைந்த அதாவது ஐம்பொறிகள் ஏவமாட்டாத ஜீவாத்மாக்களான நித்திய ஸூரிகளும் நீயே, "இன்னேயானல்-இங்ஙனே தத்வமானல் (இங்ஙனே "இன்னே" என்பதாகச் சுருக்கிப் பிரயோகம் தமிழ்நாட்டில் தென் பாகத்தில் உண்டு) எங்கு வந்து உறுகோ-நான் எங்ஙனே உன்னை வந்து சேருவது! எம்பெருமானே எல்லாப் பிரஜைகளின் எல்லாப் பிரவர்த்திகளுக்கும் நிர்வாஹனுனல் அவன், நம்மாத்மா நம் தேஹத்தை ரக்ஷித்து நடத்துவதுபோல் அவனே அல்லவோ என் மனோரதத்தையும் முடிக்கவேண்டும். முன் பாட்டில் அவனே எல்லாவற்றிற்கும் ஆத்மாவென்றார். இப்பாசுரத்தில் எல்லாவற்றையும் காப்பாற்றி அறியும் அவன் எனது காரியநிர்வாஹத்துக்கு மாத்திரம் எனக்கு ஏன் சுமதலை வைக்கிறானென்று ஆழ்வார் வினவுகிறபடி. "என்னை ஆள்வானே" இதுவரையில் எனக்கு அருள்செய்து இரக்ஷித்தவனே இன்னமும் என்னை முன்போலேயே ரக்ஷித்தருள ஆகாதோ ?

குறிப்பு:—"ஓர்" என்று பாடமானல் என் தலைமேல் இனி என் ரக்ஷணத்தை சுமத்தலாமோ. ஓர்-முன் நடந்ததையும், நீ ஸுகம் நடத்துவதையும் ஆராய்ந்து பார்த்தாயானல் நீயே என்னை யருள்புரிந்து ரக்ஷிப்பாய் என்று தீர்மானித்து பேசுகிறபடி.

7-ம் பாசுரம்

இறந்தது நீயே யெதிர்ந்தது நீயே
    நிகழ்வதுநீ யின்னே யானல்
சிறந்தநின் றன்மை அதுவிது வுதுவென்
    றறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்
கறந்தபால் நெய்யே நெய்யினின் சுவையே
    கடலினு ளமுதே யமுதிற்
பிறந்தவின் சுவையே சுவையது பயனே
    பின்னைதோள் மணந்த பேராயா.

உரை:—பின்னை தோள் மணந்த பேராயா - கேவலம் இடைக்குலத்துக் கோபாலனுய் அவதரித்துப் பிறந்து மஹத்தான காரியங்களை நிர்வஹித்ததில் பிறந்த நீளாதேவியின் அபராவதாரமான நல்பின்னை பிராட்டியை மணந்து அவளுக்குக் களிப்பு ஊட்டும் நிமித்தம் அவளை மணப்பதற்கு ஏழு முரட்டுக் காளைகளை அடர்த்து ஜயிக்கவேண்டியதாக ஏற்படுத்திய வரசுல்க்கபரிக்ஷையில் நீ எவ்வளவு பரமனுயிருந்தாயாயினும் தாழ்ந்து அவளின்பொருட்டு அவள் காரியம் நிறைவேற்றிக்கொடுக்க அமர்ந்த சுலபனல்லவோ. "இறந்த நிகழ் காலத்திலும் எதிர்காலத்திலும் நடக்கும் காரியங்களுக்கு ஆத்மாவாய் ரக்ஷகனுயிருந்த உன்னுடைய இந்த நிரவதிக காருணியத்தையும் பொய்யோவென்று ஐயப்படுகிறேன். இப்படி ஏன் ஸமுசியப்பட வேணுமென்றால் ஆச்சரியமான இன்பம்விளைக்கும் உன்னைக் காணப்பெறுமல் ஒழிந்தால் சந்தேகம் வாராதோ.

குறிப்பு:—நீ அமிதம்மாத்திரமல்ல அதின் சுவையின் பிரயோஜனமே நீ என்கிறார்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—12. நாடவிட்ட படலம்

[440-வது பக்கத் தொடர்ச்சி]

அனுமனின் பொறுமைக் கரியதோர் சோதனை.

சீதையினங்கங்கள் வருணிப்பதற் கின்னும் பலவுள.

ஒப்பில்லா அவள்முலைகளை யுரைத்தபின் இராமன், தோள்களினெழிலைத் தொடர்ந் தினி யுரைக்கப் புகுகின்றான்.

கரும்புகண் டாலு மாலைக்
    காம்புகண் டாலு மாலி
யரும்புகண் டாரை சோர
    வழுங்குவே னறிவ துண்டோ
சுரும்புகண் டாலுங் கோதை
    தோணினைந் துவமை சொல்ல
விரும்புகண் டனைய நெஞ்ச
    மெனக்கிலை யிசைப்ப தென்னே

[கரும்பைக் கண்டபோதும், ஒழுங்கான மூங்கிலைக் கண்டபோதிலும், எனது கண்களில் சுரக்கின்ற மழை போன்ற நீர்த்தாரை பெருக வருந்துவேன். இதுவன்றி வேறு அறியும் வகையுண்டோ. வண்டுகள் மொய்த்து ஒலிக்கின்ற மாலையை அணிந்த சீதையின் தோள்களை நினைத்து உவமை சொல்வதற்கு, இரும்பு போன்ற வலிய மனம் எனக்கு இல்லை. நான் என்ன சொல்வேன்]

முன்கையே யொப்ப தொன்று
    முண்டெமூன் றுலகத் துள்ளு
மென்கையே யிழுக்க மன்றி
    யியம்பினுங் காந்த ளென்றல்
வன்கையாழ் மணிக்கை யென்றன்
    மற்றொன்றை யுணர்த்த லன்றி
நன்கையா டக்கை யாமோ
    நலத்தின்மே நலமு முண்டோ

[மூன்று உலகங்களிலும், இச்சீதையின் முன்னங்கை போன்றதாகிய ஒரு பொருள் உண்டு என்று சொல்வதே குற்றமல்லவா. அப்படிச் சொல்லப் போனாலும், அவளது அழகிய முன்னங்கைகளைக் காந்தள்மலர் என்று கூறுதல் மிக்க கொடுமையாம். மகர யாழ் என்று கூறுவதோ ஒரு சம்பந்தமுமில்லாத வேறொன்றைச் சொல்வதாம். மற்று அவை,நல்ல கைகளையுடைய சீதையின் சிறந்த முன்னங் கைக்கு ஒப்பாகுமோ. நல்லதுஎன்று அமைந்த ஒன்றற்கு மேலும் நல்லது ஒன்று உண்டோ]

ஏலக்கொண் டூன்ற பிண்டி
யிளந்தளிர் கிடக்க யாணர்க்
கோலக்கற் பகத்தின் காமர்
குழைபடுங் கமல மென்பூ
நூலொக்கு மருங்கு லாட
னூபுரம் புலம்புங் கோலக்
காலுக்குத் தொலையு மென்றாற்
கைக்கொப்பு வைக்க லாமோ

[எற்கும்படி உண்டாகின்ற அசோக மரத்தின் இளமை மிகுந்த தளிர்கள் கிடக்கட்டும். புதிய அழகிய கற்பகத்தின் விரும்பக்கூடிய தளிர்களும், தாமரைக் கொடியில் உண்டாகும் மெல்லிய மலர்களும், நூலைப் போன்ற இடையுடையசீதையின் சிலம்புகள் ஒலிக்கின்ற அழகிய கால்களுக்குத் தோற்றுப்போகும்என்றால், அவைகளைக் கைக்கு உவமை கூறுவது நேராமோ]

வெள்ளிய முறுவல் செவ்வாய்
விளங்கிழை யிளம்பொற் கொம்பின்
வள்ளுகிர்க் குவமை நம்மான்
மயர்வற வகுக்க லாமோ
வெள்ளுதிர் நீரே மூக்கை
யென்றுகொண் டிவறி யென்றுங்
கிள்ளைகண் முருக்கின் பூவைக்
கிழிக்குமே லுரைக்க லாமோ

[வெண்மையான பற்களையும், சிவந்த வாயையும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களையும் உடைய இளமையான பொன் கொம்பு போன்ற சீதையின் கூர்மையான கை நகங்களுக்கு ஒரு உவமை, நம்மால் மயக்கமின்றி எடுத்துக் கூறக்கூடுமோ. கிளிகள், மகளிர்வாய்க்கு ஒப்பாகும் முருக்கமலர்களைப் பார்த்து, அவைதாம் தம்மைப் பழிக்கும் வாய்கள் என்று மயங்கி, நீங்களே எங்கள் மூக்கைச் சீதாபிராட்டியின் கை நகங்களுக்கு ஒப்பாகாதென்று இகழ்கின்றீர்கள் என்று அவைகளின்மீது கோபங்கொண்டெப்பொழுதும் அவைகளைக் கிழிக்குமானால், அக் கிளிகளின் மூக்கை இச் சீதையின் நகங்களுக்கு உவமையாகக் கூறலாமோ]

அங்கையுமடியுங்கண்டாலரவிந்தநினையுமாபோற்
செங்களிசிதறிநீலஞ்செருக்கியதெய்வவாட்கண்
மங்கைதன்கழுத்தைநோக்கிவளரிளங்கமுகும்வாரிச்
சங்குமுநினைதியாயினவையென்றுதுணிதிதக்கோய்

[சிறந்தவனே, சீதையின் அழகிய கால்களையும்கைகளையும் கண்டால் செந்தாமரைமலரை நினைக்கும்விதமே போல, செவ்வியகளிப்புற்று நீலமலரைச் செருக்குடன் இகழ்ந்த தெய்வத்தன்மை பொருந்திய வாள்போன்ற கண்களையுடைய சீதையின் கழுத்தை நோக்கியளவில் வளர்கின்ற இளமையாகிய பாக்குமரத்தையும் நீரில் உண்டாகும் சங்கையும் நினைப்பாயானால் அவைகளே அவள் கழுத்திற்கு உவமையாம் என்று நிச்சயித்துக்கொள்]

பவளமுங் கிடையுங் கொவ்வைப்
பழனும்பைங் குமுதப் போதுந்
துவள்வில விலவங் கோப
முருக்கென்றித் தொடக்கஞ் சாலத்
தவளமென் றுரைக்கும் வண்ணஞ்
சிவந்துதேன் றதும்பு மாயிற்
குவளையுண் கண்ணி வண்ண
வாயது குறியு மஃதே.

[குவளைமலரை யொத்தமையுண்ட கண்களை யுடைய சீதையின் அழகிய வாயானது, பவளமும் செஞ்சடையும் கோவைப்பழமும் இளஞ் செவ்வல்லிமலரும், துவளாத இலவமலரும், இந்திரகோபமும், முருக்கமலரும், என்ற இவைகள் தொடக்கமான உவமைப்பொருள்கள், தனக்கெதிர் மிகவும் வெண்மையானவை என்று கூறும்படி சிவந்து, தேன்நிரம்பி யிருக்கும் என்றால், அதற்கு அடையாளமாகக் கூறத்தகுந்த பொருளும் அவள் வாயேயாம்]

பொறுத்தவர்களுக் கொருநாளும் குறைவில்லை. இராமன் இங்குச் சீதையை வருணிப்பனபோன்ற சுவையற்றசெய்யுள்கள் கம்பர் நூலினுள்வேறு காண வேண்டுமென்னின் நெடுங்காலந் தேடல் வேண்டும். இதற்கு உவமையில்லை, இதற்குவமை ஆகாது அது, என்னுங் கருத்துக்கள் பொதுமையினும் பொதுமை. அன்னவைகளும் அவைகளைச் செய்யுளில் அமைக்கும்போது நேர்கின்ற எதுகை முதலிய இடர்களும் அல்லாமல் உவக்கக்கூடியதொன்றும் இப்பாகத்தில் தென்படவில்லை. கம்பருக்கேனும், பாடும் இராமனுக்கேனும், பாடப்பெறும் சீதைக்கேனும், கேட்கும் அனுமனுக்கேனும் அடுக்காத பாசுரங்களே யிவை; இதிலோர் ஐயமில்லை. கம்பர் நூலின்கண் வெள்ளிப் பாடல்கள் எனப் பெயரெடுத்திருக்கும் பாடல்கள் பல. இப்புலவரை அன்புடன் வியப்பவர் இப்பாடல்களுக்கே அவ்வரிசையில் முதலிடம் கொடுப்பாராயின் கம்பர் அந்நன்றியை ஒருபோதும் மறக்கமாட்டார். நம்முடைய ஆசையன்றிவேறு ஆதாரமின்மையின், வெள்ளிப்பாடலென்னும் விளம்பரத்தினுள் தஞ்சம்புக வழியில்லையெனினும், வேறு இவைகளை ஆதரிப்பதற்குரிய வழியும் இல்லையே. மேலும், "கையில் தொட்டவெற் குணரலாம் மற்று உண்டெனுஞ் சொல்லுமில்லை'' என்னக் கம்பரல்லால் வேறு ஒரு புலவர் சீதையின் இடையைச் செப்பவல்லரோ, என வினவலாம்; உண்மையே. ஆயினும், அதற்குமோர் அமைதி காணல் அருமையன்று. கம்பர்காலத்திலேயே இவ்வெள்ளிப்பாடல்கள் நடமாடத் தலைப்படவும், கம்பர் அவைகளுக்கிடையே "சட்டகந்தன்னை நோக்கி'' என்னுஞ் செய்யுளை, இடைச்செருகலுக்கு இடைச்செருகலாகப் புகுத்திவிட்டார் என்றக்கால் யார் அடிப்பார். இது இடையைப்பற்றிய செய்யுளாதலின், இடைச் செருகல் என்பது இதற்கு எல்லாப் பொருளினு மினிதுபொருந்தும். மற்றைய செய்யுள்களில் வரும் சில வாசகங்களோடு மாறுபடுவதாலும் இச்செய்யுளின் கதி வலியுறப் பெறுகின்றது. ஏனெனில், "கட்டுரைத் துவமை காட்டக் கட்பொறி கதுவா'' என்றுநின்ற இக்கையறுநிலைக்கு நேர்எதிராக, "வஞ்சி போல் மருங்குலாள்'' என்றும், "சிற்றிடையா யுற்ற சிறு கொடி'' என்னவும், "நூலொக்கும்

மருங்குலாள்" என்றும், முன்னும் பின்னும், கட்டு
ரைத்து உவமை காட்டியிருக்கக் காண்கின்றோம்.
ஒருகால், பாவையிடையைப் பரம்பொருள் நிலைமை
யாக ஏற்றிய பான்மைக்கு இம்முரணும் ஏற்கும்
போலும். "அப்பனே, அம்மையே, அரும்பொன்னே,
மணியே, ஆருயரே, அமுதமே" என்றென்றெல்லாம்
கடவுளை அழைக்கும் அடியார், பிறகு "ஒப்பில்லாப்
பொருளே" என முடிக்கும் கொள்கையினுள் இவ்
விடையின் செய்தியும் அடங்குவது எளியதே.

இது எவ்வாறாயினும் இராமனுடைய கூற்றாக
அச்செய்யுள் அமைந்திருத்தலின் வேறொரு வழக்
கும் அதனுள்ளே காணக்கிடக்கின்றது. முன்கோலங்
காண்படலத்துச் செய்யுளில், "பரம்பொருள் என்ன
யார்க்கும் இல்லை உண்டு என்னநின்ற இடை" என்
றனர் கம்பர். இல்லையென்னும் சொல்லிற்கு இலக்
காயிருக்குந் தன்மையில் அப் பரம்பொருள் உளதா
கின்றதென்பது வாய்மையே. பரம்பொருள் 'இல்லை'
என்பதனின்று அந்தவொருபயனையேனும் கொள்ள
லாம். மற்று, 'உண்டு' என்பதால் எய்தவல்ல உப
யோகம் என்ன? கடவுள் உணர்வினால் தொடவல்ல
வொன்றன்றி உரையினால் உணர்த்தவல்ல தொன்று
அன்று. கடவுளை உணர்ந்தவர் பிறகு அக்கடவுளி
னின்று வேறாகி, 'உண்டு' என்று சொல்லமாட்டுவா
ரல்லர். அக்கடவுளை உணராதவர், 'உண்டு' என்ப
தும் 'இல்லை' என்பதும் ஒன்றே. ஆதலின் 'உண்டு'
என்னும் அச்சொல் கடவுள் திறத்தில் செல்லாது.
இந்தத் தத்துவத்திற்கு மாறாக முன், "இல்லை உண்டு
என்ன நின்ற இடை" யென்று கம்பர் இயம்பியதை
மறக்கவேண்டும் என்னுங் கருத்தினன்போல இரா
மன் இத்தனைகாலங் காத்திருந்து இந்தச் செவ்வி
யில் "தொட்ட வெற்றுணரலாம், மற்று உண்டெ
னுஞ்சொல்லு மில்லை" என்னச் சாற்றிவிட்டான்.
இப்படி, தன்னைப் பாடிய புலவரை இராமன் மறத்
துத் திருத்துகின்ற இடம் இது வொன்றேயன்று.
'நெடுமுடி நீ சூடுவாய்' என்று தசரதன் வேண்டிய
நாள், இராகவன் 'காத லுற்றிலன் இகழ்ந்திலன்'
என்று கம்பர் இயம்பியதற்கு எதிராக, பின் இந்திர
சித்தன் எய்த பிரம்மாத்திரத்தினால் வீழ்ந்து பட்ட
வானரவீரர்களுக்கு இரங்குங்காலத்தில், "மண்மேல்
வைத்த ஆசையினால் மாதா முதலானோர்க்கும் புண்
மேல் வைத்த தீ நிகர் துன்பம் புரிவித்தேன்" என்
றும், "புன்தொழில் புலை அரசினை வெஃகி யென்
செய்தேன்" என்றும் புலம்பு மளவில், தன் சித்தம்
கம்பரது அனுமானத்திற்கு அயலாயிருந்ததென்ன
அறைகூவிப் பகர்ந்தது போன்றே, இங்கு "உண்டு
என்னுஞ் சொல்லுமில்லை" என்ற வாசகத்தால், தன்
தத்துவம் கம்பரின் காட்சியினின்று வேறாயிருக்குந்
தன்மையை வெளிப்படுத்த லாயினன். இடைச்
செருகல் பாடி அமைத்துக்கொண்டதன் பலனாகக்
கம்பருக்கு இக்கதி கிடைத்தது போலும்.

இந்தச் செய்யுளை இன்னபடி இடைச் செருகல்
என்று பரிகசிக்கும் வண்ணம் இவ்வருணனைப் பாசு
ரங்கள் பிற கம்பர்மணமின்றிக் கைகடந்து நிற்பதன்
காரணம் தெரியவில்லை. சீதையைத் தேடச்செல்லும்
அனுமன், மேற்கொண்ட வொருபெரியகாரியத்தைச்
சாதித்து மீளவேண்டுமாயின் அவனுக்கு அளவற்ற
பொறுமை இன்றியமையாததாம்; இல்லையாயின் அ
வன் மிகவிரைவிற் சலிப்படைந்து திரும்பிவிடுவான்.
ஆதலின் அவன் பொறுமையைச் சோதிக்கவேண்டு
மென்ற எண்ணத்தனாகி இராமபிரான், இவ்வகை
ஈரமில்லா வருணனைகளை ஈறு மின்றி உரைக்கப்புக்க
னன்போலும். இடையில் தடுக்காமலும், தன் செவிக
ளைப் பொத்திக்கொள்ளாமலும், ஆவி நனி நைந்து
தரையிற் சாயாமலும் இத்தனை பல பாசுரங்களையுங்
கேட்டு அனுமன் தன்னிலை நிற்பானாயின் அன்ன
வனே இவ்வரியகாரியத்திற்குரிய தாளாண்மையுடை
யவனாவான் என்ற சூழ்ச்சியே கம்பரது நாடகப்புல
மையினின்றுஇப் பாசுரங்களைச் சுரப்பித்தன என்
போமாயின் அப்புலவர் நம்மைப்பற்றி யாது நினைப்
பார் என்பதை எடுத்துச்சொல்ல வெள்குகின்றோம்.
எனினும், அனுமனது பொறுமைக்குணம் இறுதி
வரையில் நேருறச் சோதிக்கப்பெற்றதென் றெண்ண
இடமுமில்லை. ஏனெனில் இராகவன், தன்னையுந்
தன் சூழ்ச்சியையும் மறந்து,

சிவந்ததோ ரமிர்த மில்லை
 தேனில்லை யுளவென் றாலும்
கவர்ந்தபோ தன்றி யுள்ள
 நினைப்பவோர் களிப்பு நல்கா
பவர்ந்தவா னுதலி னுடன்
 பவளவாய்க் குவமை பாவித்
துவந்தபோ துவந்த வண்ண
 முரைத்தபோ துரைத்த தாமே.

[சிவந்தநிறமுடைய அமிர்தம் ஒன்றும் இல்லை, தேனும்
இல்லை. இருந்தாலும் அவை உட்கொண்ட காலத்தில்
அல்லாமல், மனத்தினால் நினைத்தஅளவில் ஒரு களிப்பை
உண்டாக்க மாட்டா. ஆகையால், செறிந்த ஒளிதங்கிய
நெற்றியையுடைய சீதையின் பவளம் போன்றவாய்க்கு
உவமை பாவனை செய்து, அதனை உவந்தபோது உவந்தப
டியே உரைக்குந்தோறும் உரைத்தபடி வருணித்துஉரைத்
ததாகும்.]

என்னும் ஒரு அழகின்மிக்க செய்யுளை இடைச்
செருகிவிடவே, உணர்வின் எல்லையை எட்டுந் தறு
வாயிலிருந்த அனுமன் மனந்தளிர்த்துப் பின்னும்
இது போன்றபாசுரம் ஒன்றிரண்டு வரினும் வரலாம்
என்னு மாசையால் தன் பொறுமையை அடியுடன்
இழக்காமல் நின்றிருத்தலுங் கூடும்.

எனினும், இந்தச் செய்யுள் அழகாயிற்றென்றால்
அந்நன்றி திருவள்ளுவர்க்குப் பெரிதும் உரியதாய்
நிற்கின்றது. முதலிரண்டடிகளில் அமைந்த வேற்
றுமை யணியை அழகுற வகைசெய்து தந்த

உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்வதாற்
கள்ளினுங் காம மினிது

என்றும்,

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு

என்றும் எடுத்துக்காட்டியுள்ள குறள்களின் நினைவே
இங்கு இப்பாசுரத்தின் அழகைத் தூண்டியிருத்தல்
வேண்டும். வள்ளுவர் காமத்திற் குரைத்துவைத்த

வவ் வேற்றுமையை இராமன், அக் காமத்திற்குரிய முத்திரை இட்டுவைக்கின்ற வாய்க்கு ஏற்கும்படி மாற்றி அமைத்துக் கொண்டான். அவ்வாயினை உள்ளவே அவன் எத்தனை களிப்படைந்தனன் என்பதை, "உவந்தபோது உவந்த வண்ணம் உரைத்தபோது உரைத்த தாமே" என அவன் தொடர்ந்துரைத்த வாசகத்தில் தவழ்ந்தினிது தூங்குகின்ற மயக்கத்தினால் தெரிந்துகொள்ளலாம். 'உவந்தபோது உவந்தபடி உரைத்தபோது உரைத்ததாம்' என்று தெளிவின்றி வழங்கியுள்ள இவ்வார்த்தைகள் கள்ளுண்ட கோலத்திற்குச் சாலக் கரிகூறுகின்றன. எனினும் என்: இத் தெளிவில்லாமையே அதன் அழகாம். கம்பரும் இதனை உவந்தபோது உவந்த வண்ணம் உரைத்துவிட்டார்.

அணியிலக்கணம்

உடனிகழ்ச்சியணி—ஸஹோக்தியலங்காரம்

[447-வது பக்கத் தொடர்ச்சி]

முன்னிதழில் காட்டி விளக்கிய உதாரணங்களினின்று இவ்வுடனிகழ்ச்சியணியின் இலக்கணத்தை உணர்ந்துகொள்வது எளியதாகும்:—

முன்பின் என்னும் முறைமையுடைய காரண காரியங்கள் ஒருங்கே நிகழ்வதாகக் கேட்போர் மகிழும்படி திறம்பட உரைப்பது உடனிகழ்ச்சி யணியாம்—என்று கூறுதல் நலம். இவ்வணிக்கு விதி வகுத்திருக்கும் இலக்கண நூல்கள், பொதுவாக, இரண்டினை ஒன்றாய்ச் சேர்த்துரைப்பதால் இவ்வணி அமைந்துவிடும் என்னக் கூறுகின்றனவே யொழிய, எந்த இரண்டு ஒன்றாய்ப் புணர்தல் இவ்வணிக்கு ஆதாரமாகும் என்ன எடுத்துக் காட்டவில்லை:—

(1) உணர்ந்தோர் உவக்க உடனிகழ் வோதல்
உடனவிற்சி. —குவலயாநந்தம்

(2) துப்பார் ஒருங்கியல் தூய்வினைபண்பு இரண்டு
பொருட்கு ஒப்பா ஒருசொல்லு வைப்பது.
—வீரசோழியம்

(3) நன்றிகொள் பண்பு வினையிவை காலத்
தொன்றவிருபொருட்குரைப்பது புணர்நிலை.
—மாறனலங்காரம்

(4) வினைபண்பெனவிவையிருபொருட்கொன்றே
புணரமொழிவது புணர்நிலை யாகும்.
—தண்டியலங்காரம்

இந்தச் சூத்திரங்களையே கொண்டு உடனிகழ்ச்சியணியின் தன்மையை உணர்ந்துகொள்ளல் மிகவும் அரிதாம். இதன்படி, இராமனோடு இலக்குவன் வந்தான், அல்லது நாயோடு பூனையும் உண்ணும், என்பன போன்ற வாக்கியங்களெல்லாம் உடனிகழ்ச்சியாகிவிடும். ஆயினும், "உணர்ந்தோர் உவக்க" இவை அமையவில்லை யாதலின், அணி என்று உரைப்பதற்கு அவை உரியன அல்ல வென்பது உண்மையே. எனினும், உணர்ந்தோர் உவக்கும்படி ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருப்பினும், உடனிகழ்ச்சியணி யமையாமற் போதலுங்கூடும். இதற்குச் சில உதாரணங்கள் பார்ப்போம்.

இராவணன் கவர்ந்து சென்றபோது சீதை உதிரவிட்ட அணிகலன்களைச் சேர்த்துவைத்திருந்த சுக்கிரீவன் அவைகளை இராமனுக்குக் காட்டிப் பின்வருமாறு கூறுகின்றான்:—

உழையரி னுணர்த்துவ துளதென் றுன்னியோ
குழைபொரு கண்ணினள் குறித்த தோர்ந்திலம்
மழைபொரு கண்ணினை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டனள் யாங்க ளேற்றனம்

[தூதர்கள்போல இவை தன் நிலைமையைத் தெரிவிக்கக்கூடுமென்றுஎண்ணியோ, குழைகள்மோதுகின்றசீதை கருதியதை அறியவில்லை. மழைபோன்ற தன் கண்கள் இரண்டினின்று சொரிகின்ற நீருடன் தன் ஆபரணங்களை ஆடையில் முடித்துக் கீழே போட்டாள். நாங்கள் ஏந்திக்கொண்டோம்]

'இருபொருட்கு ஒன்றே புணர மொழிவது புணர்நிலையாகும்' என்ற இலக்கணத்தின்படி, "கண்ணீரொடு கலன்களை இட்டனள்" என்பது இவ்வணி ஆதல் வேண்டுமாயினும், (ஒடு என்னும் உருபும் வந்திருக்கின்ற தாயினும்), இது உடனிகழ்ச்சியணி ஆகுமோ வென்பது மிகவும் ஐயத்திற் கிடமானதே. இவ்வுலகில் எந்த இரண்டைத்தான் இப்படிச் சேர்க்க இயலாது? கண்ணீரையும் உகுத்தாள் ஆபரணங்களையும் உகுத்தாள், என்ற இரண்டு செய்திகள், உரைக்கப்படுகின்றன. இவை இரண்டும், சீதையின் நிலைமையைக் கருதுங்கால், சோகச் சுவைக்கு ஆதாரமாகி நிற்கின்றன. ஆயினும் அவ்விரண்டிற்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை. ஆகையால் அவைகளைச் சேர்த்ததில் உள்ள திறமை உடனிகழ்ச்சியணிபிறப்பதற்குப் போதாது.

நாடிழந்து காட்டிற் சென்ற நளனையும் தமயந்தியையும் வஞ்சிக்கவேண்டி, கலி, அவர்முன்னே ஒரு பொற்புள் உருவாய்த் தோன்றுதலும், நளனும் தமயந்தியும் ஒரு ஆடை புனைந்து மற்ற ஆடையால் அப்புள்ளினைப் பிடிக்கப் போர்த்தியபோது, அது அவ்வாடையுடன் ஆகாயத்திற் கிளம்பிவிடவே, ஒற்றையாடையை இருதலைப்பும் சுற்றிநின்ற நளனுக்கும் தமயந்திக்கும், "ஆவிபோல் ஆடையும் ஒன்றானதே" என்று புகழேந்திப்புலவர் இனிது பரிகசிக்கின்றார். இருவர் உயிரும் எப்படி ஒன்றேயாக இருந்ததோ அப்படியே இப்பொழுது அவர்களுடைய ஆடையும் ஒன்றாயிற்று என்பது இதன் பொருள். (போல் என்னும் உருபு இருத்தலால் இது உவமையணி காட்டும். எனினும் பொருளை ஆழ்ந்து நோக்குங்கால், ஆவியோடு ஆடையைச் சேர்ப்பதில்தான் இவ்வாசகத்தின் திறமை அமைந்திருக்கின்றது. 'ஆவியோடு ஆடையும் ஒன்றானதே' என்பதே இக்கருத்திற்கு ஏற்ற அமைப்பாகும். ஆதலின் அவ்வாறே கொண்டு ஆராய்கின்றோம்) 'ஆவியோடு ஆடையும் ஒன்றாயது' என்னும் வாசகம், இலக்கணநூல்கள் கூறியிருக்கின்றவிதியின்படி உடனிகழ்ச்சியணியமைந்ததுபோல் தோன்றுமெனினும், முன்பின்னாக நிகழவேண்டிய காரணகாரியத்தொடர்பு ஆவிக்கும்ஆடைக்கும் இயற்கையாக இல்லாமையால் இதனை உடனிகழ்ச்சியாகக் கொள்ளாமையே சிறப்புடைத்து.

தொடர்பில்லாத இரண்டைத் தொடர்பு படுத்துவ தன்று உடனிகழ்ச்சியணி; காரணத்தையும் காரியத் தையும் உடனிகழவைப்பதே உடனிகழ்ச்சியாமென இங்கிதன்முன் வற்புறுத்தப்பெற்றிருப்பதை மறத் தலாகாது. முன்னரே இருவராவியும் ஒன்றெனும் படி அன்பினராயிருந்த காரணத்தால் இப்பொழுது இருவராடையும் ஒன்றாயின, என வலிந்துரைத்தா லன்றிக் காரணகாரியத்தொடர்பு இதனிற் காணல் அரிது. எனின், "ஆவியோடாடையும் ஒன்றானதே" என்பதை உடனிகழ்ச்சி யென்னற்கில்லை. அவ்வாறே,

முருகிற் சிவந்த கழுநீரும்
முதிரா இளைஞர் ஆருயிரும்
திருகிச் செருகுங் குழல்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினோ

என வரும் சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணிப் பாட்டும் உடனவிற்சி யாகாது.

காரண காரியங்களின் வேற்றுமையையும் தொ டர்பையும் மறைத்து இரண்டையும் ஒன்றாய் நிகழ்த் துகின்ற இவ் வுடனிகழ்ச்சியணியோடு உறவுடைய சில அணிகளை இதனின்று பிரித்துணரல் வேண்டும்.

மன்னநின் கணையும் ஒன்னலர் கூட்டமும்
ஏககாலத்தில் நாணிகந்து ஓடின

[அரசனே, உன் அம்புகளும்,உன் பகைவர் கூட்டமும் ஒரே காலத்தில் நாணைவிட்டு ஓடின. (நாண் வில்லின் நாண்; வெட்கம்) உன் அம்பு வில்லின் நாணைவிட்டு ஓடின அவ்வளவில் பகைவர் தம் வெட்கத்தை விட்டுப் பயந்து ஓடினர்.]

இதனில், அம்பு பாய்வதாகிய காரணமும் பகை வர் ஓடுவதாகிய காரியமும் ஒருங்கே நிகழ்வனவாகக் கூறப்பட்டிருப்பினும், இதனைஉடனிகழ்ச்சியணிஎன் னக் கொள்ளலாகாது. ஏனெனில், இரண்டு நிகழ்ச்சி களுக்கு இடையே யுள்ள காரண காரியத் தொடர் பினை அடியோடு மறக்கவைக்குந் திறமையே உட னிகழ்ச்சி யணியின் உயிர்நிலை யென்னலாம். முன் பின்னாக நிகழவேண்டியவை அவை என்னும் எண் ணமே எழாமல் காக்கும் அவ்வணி. மற்று, இவ்வு தாரணத்தில், அம்பு பாய்வதும் பகைவர் ஓடுவதும், காரண காரியங்கள் என்பதும் முன்பின்னாக நிகழ வேண்டுவன என்பதும் தெரியக் கிடக்கின்றன. ஆயி னும் அவை யிரண்டும் ஏக காலத்தில் நிகழ்ந்தன வாகக் கூறிக் காலமுறை மாத்திரம் மறக்கப் பெற் றிருக்கின்றது. இவ்வாறு வருவது வேறு அணி; அக் ரமாதிசயோக்கி எனப்படும் முறைபிறழுயர்வுநவிற்சி யாம் இது. "வள்ளல்தன் புருவத்தோடும் வரிசிலை குனிந்ததன்றே" என்றுரைத்ததுபோல், "மன்னநின் கணையொடு ஒன்னலர் கூட்டம் நாணிகந் தோடின" என்று அமையுமாஞல் உடனிகழ்ச்சியணி யென்ன லாம். இவ்வகை 'ஓடு' என்னும் உருபு வந்தவுடன், உடனிகழ்ச்சியணிக்கின்றியமையாத திறமைவகைக ளெல்லாம் திரண்டுவிடுவதால், இவ்வணி ஓடு ஒடு முதலிய சொற்கள் பெற்றேவரும் என்று தண்டிய லங்கார உரையில் கூறப்பெற்றிருக்கின்றது. இதுவுந் தக்கதே.

இனி காரணகாரிய முறையை மாற்றிக் காரியத்தை முன்னும் காரணத்தைப் பின்னுமாகக் கூறலாம். 'இக் கொடுமையைக் காணுமுன்னம் கூசின என் கண் கள்' என்னுமிடத்து, கூசுவதாகிய காரியம் காண்ப தாகிய காரணத்தின்முன் நிகழ்ந்ததாகக் கூறலா யிற்று. இது அத்தியந்தாதிசயோக்தி யெனப் படும் மிகை யுயர்வுநவிற்சி யணியாம். காரண காரிய முறை இங்குத் தலைகீழாக மாற்றப்பட்டிருக்கின்றதே யொழிய, அவை மறைக்கப்படவில்லை. உடனிகழ்ச்சி யணி யாகாமை வெளிப்படை.

இனி, காரணமும் காரியமும் தொடர்பு வெளிப் பட்டிருக்க அக்காரணத்தால் விளையும் காரியத்தின் நிகழ்ச்சியை மாத்திரம் விரைவுபடுத்திக் கூறும் சப லாதிசயோக்தி யெனப்படும் விரைவுயர்வு நவிற்சி வேறொன் றுளது.

—பொருளாக்கற்

கேழையான் செல்வ னெனப்புகலா நிற்பவிர
லாழிவளை யாயிற் றவட்கு

[பொருள் தேடிவரும்பொருட்டு நான் பிரிந்து செல்லு வேன், என்று நாயகன் சொல்ல, உடனே, அதுகேட்ட நாயகி துயரத்தினுல், விரலில் அணியும் மோதிரத்தைக் கையில் வளையாக அணிந்துகொள்ளக்கூடிய அவ்வளவு இளைத்துவிட்டாள்]

என்னு மிதினில் அவன் பிரிவேன் என்று சொன்ன தாகிய காரணமும், இவள் இளைத்ததாகிய காரியமும் வேறுந் தன்மை வெளிப்பட்டிருப்ப, நம்பமாட்டா வகையில் இளைத்தலாகிய காரியம் விரைவுபடுத்தப் பெற்றிருக்கின்றது. இதன் திறமை விரைவுபடுத்திய பான்மையிற்றான் காணலாகும். காரண காரியங்க ளென்னும் வேற்றுமை மறைக்கப்படவில்லையாகை யால் இது உடனிகழ்ச்சியாகாது.

ஒத்தெல்லோ

[Shakespeare's —"Othello"]

அங்கம் 3. களம் 3.

[437-வது பக்கத்தொடர்ச்சி]

ஒத்:—தீங்கு இழைக்கப்பெற்றான் என்பதைமாத் திரம் எண்ணி, அவன் செவிகளை நின் எண்ணங்க ளுக்கு அயலாக்குவாயாயின், இயாகோ, நீ உன் நண் பனுக்கு விரோதமாய்ச் சதி சூழ்கின்றாய்.

இயா:—ஒருக்கால் நான், எனது அனுமானத்தில் துர்மாக்கமாயிருந்தபோதினும் [2] (குற்றங்களுக்குள்

(1) நான் எண்ணியவைகளை யெல்லாம் உனக்குச் சொல்லிவிடவேண்டுமென்பது என் கடமைகளுள் ஒன்று அல்லவே, என மறுத்த இயாகோவினிடம் ஒத்தெல்லோ இவ்வண்ணம் மன்றாடுகின்றான்.

உன் நண்பனாகிய எனக்கு வேறு ஒருவன் ஒரு தீங்கு இழைத்திருக்கின்றான் என்பதையறிந்துமதனைஎனக்குத் தெரிவிக்காமலிருப்பது பெருந் துரோகம் ஆயிற்றே. என்னை நீ இப்படிச் சதிசெய்யலாமா—என்பதுபொருள்.

(2) ஒருக்கால் நான், பிறர் துர்மார்க்கமான காரியங் களைச்செய்திருக்கின்றார்கள்என்று அநுமானிக்கநேர்ந்த போதிலும், அறிவாளியாகிய நீ அதனை உறுதியாகக் கொண்டுவிடாதே, என்று சொல்ல வருகின்றான்.

ளேயே ஒற்றாடுவதும், இல்லாத பிழைகளை என் பொறாமையானது அடிக்கடி உருச்செய்து தருவதும், என் இயற்கையின் பீடை என்பதை ஒவ்வுகின்றேன்) [3]நின் அறிவானது இத்துணைக் குறைவுறக் கருதப்புகும் ஒருவனின்று குறிக்கொள்ளவேண்டாவென்று உன்னை யான் வேண்டிக்கொள்கின்றேன் [4]. சிதறியதும் நிச்சயமல்லாததுமாகிய அவனுடைய அபிப்பிராயங்களிலிருந்து உனக்கே ஒரு கஷ்டத்தைக் கட்டிக்கொள்ளவும் வேண்டா. [5]என்னுடைய எண்ணங்களை உனக்கு அறிவித்தல் நின் அமைதிக்கேனும் நின் நன்மைக்கேனும், மற்று. என் ஆண்மைக்கேனும் வாய்மைக்கேனும் அல்லது அறிவிற்கேனும், ஆகாது. [6]

ஒத்:—இதன்பொருள் என்ன?

இயா:—ஆணிலோ பெண்ணிலோ, நல்ல பெயரே, எனதருமைத்தலைவா, அவர்தம் ஆன்மாவின் அண்மிய ஆபாரணமாகும்: [7] என் பையைத் திருடுகின்றவன் குப்பையையே திருடுகின்றான்; [8] ஏதோ ஒன்று, ஒன்றுமே யில்லை; [9] என்னுடையதாக இருந்தது, அவனுடையதாக இருக்கின்றது, ஆயிரம்பேர்களுக்கடிமையாக இருந்திருக்கின்றது அது. மற்று, என்னின்று என் நற்பெயரை அபகரிப்பவனோ, தன்னைத் தனவானாக்கமால், உண்மையே என்னை ஏழையாக்குகின்ற ஒன்றினை என்னிடத்திலிருந்து கொள்ளைகொள்பவனாகின்றான். [10]

ஒத்:—தெய்வங்களின்மீது ஆணை, உனது எண்ணங்களை நான் அறிந்தே தீர்வேன்.

இயா:—என் இதயம் உன் கையிலேயே இருந்தாலும் அது இயலாது. என்வசத்தி லிருக்கும்வரையில் நீ அது செய்யக் கடவாயல்லை. [11]

ஒத்:—ஹா!

இயா:—ஓ! என் தலைவா, அவ்வியத்திற்காளாகாதே; தான் உண்ணும் ஊனைப் பரிகசிக்கும் பச்சைக்கண் பூதம் அது. [12]மோசம்போன கணவன் ஆனந்தமாக வாழ்கின்றான்; தன் விதி நிச்சயமாகித் தன்னைப் பிழைத்தவளைக்காதலிப்பதில்லை [13].மற்று, மையல்கொண்டும் ஐயப்படுகின்றவன், சந்தேகம் வைத்தும் உறுதியாகக் காதலிக்கின்றவன், ஓ ஓ, பாழும் நாழிகைகள் அவன் எத்தனை எண்ணியெண்ணிக் கழிக்கின்றான். [14]

ஒத்:—ஓ துயரமே! [15]

இயா:—வறுமையுடன் திருப்தியே செல்வம்' போதிய செல்வம்; [16] மற்று, தான் வறியனாவான்

(3) குற்றங்களுக்குள்ளேயே... ஒவ்வுகின்றேன்-என்று மிக்க நல்லவன்போல், தன் குறையைத் தானே ஒப்புக்கொள்வதாகக் காட்டிக்கொள்கிறான். பிறரிடத்தில்குற்றமே தேடுகின்ற குணமுடையவனாதலால், பொறாமைமிக்க எனது கண்களுக்கு, பிறர் செய்யாத குற்றங்களும் செய்யப்பட்டனபோல் தோன்றும்—என்பது பொருள்.

(4) இத்துணைக் குறைவுடையவன் நான்; ஆகையால், எனக்குத் தோன்றும்எண்ணங்களை நீ நிச்சயமென்று ஏற்றுக்கொள்ளலாகாது—என்பது பொருள்.

(5) அவனுடைய - என்று இயாகோ தன்னையே படர்க்கையிற் பேசிக்கொள்கின்றான். சிதறிய அபிப்பிராயம் - தொடர்பில்லாமல் குழம்பிக்கிடக்கும் அபிப்பிராயம்.

இவ்விதம், தான் சொல்வதை நம்பவேண்டா நம்பவேண்டாஎன்று இயாகோவற்புறுத்துவது வஞ்சனையிலும் தீர்ந்த வஞ்சனை. முதலாக இது, இயாகோவை வெள்ளைமனமுடைய ஒரு யோக்கியன்போல் தோன்றச்செய்யும். இரண்டாவதாக, அவனெண்ணத்தைத்தெரிந்துகொள்ள வேண்டுமென்னும்பரபரப்பை ஒத்தெல்லோவிற்கு அதிகப்படுத்தும். மூன்றாவதாக, ஒருகால் ஒத்தெல்லோ இவன் மீதே திரும்பி, "எப்படியடாஎன் டெஸ்டிமோனாவின்மீது இவ்வடாப்பழி சுமத்தத்துணிந்தாய்" என்றுவெகுள்வானானால் "எனக்கும் நிச்சயமில்லை நீயும் நம்பாதே,உன்மீது எனக்கிருக்கும் அன்பின்மிகுதியால்எனக்கு இந்தஅசட்டுச் சந்தேகம் தோன்றியது, என்று நான்தான் முன்னரே சொன்னேனே" என்னத் தப்பிவிடுவதற்கும் வழி உளது. இவ்வளவு ஆழ்ந்த வஞ்சனையை அறிந்துகொள்ளும் ஆற்றல், வெளுத்ததெல்லாம் பால் என்றிருக்கும் வீரன் ஒத்தெல்லோவிற்கு ஏது.

(6) மீண்டும் ஒத்தெல்லோ தன்னைக் கேட்கும்படி தூண்டுவதற்காக, மீண்டும் இப்படி, சொல்ல மறுக்கின்றான் இயாகோ.

(7) ஆணிலாகட்டும் பெண்ணிலாகட்டும் மனிதர் அதிகம் மதிப்புவைத்திருப்பது அவரவர் நற்பெயரிற்றான் - என்பது பொருள்.

டெஸ்டிமோனாவின்மீது பழிசுமத்தும் குறிப்பை இப்பொழுதுதான் முதல்முதல் தெரிவிக்கத் துவக்குகின்றானாகையால்'**பெண்ணிலோ**' என்பதை அழுத்திச் சொல்லியிருப்பான்.

(8) பை - பணப்பை; பணத்தைத்திருடுகின்றவன் பெரியதொன்றையும் திருடிவிடவில்லை—என்பது பொருள்.

(9) ஏதோ ஒன்று, ஒன்றுமே யில்லை......பணம்போனால் ஏதோ சிறியதொன்று போயிற்றென்று வருந்தினால் வருந்தலாமே யொழிய அது பெரியதொரு நஷ்டமன்று என்று சொல்லத்துவக்கிய இயாகோ, 'ஏதோ வொன்று' என ஆரம்பித்து, பிறகு தன்னையேதிருத்திக்கொள்வான் போல், 'பணம் போவது சிறிய நஷ்டமாகக்கூடக் கருதுவதற்கு உரியதல்ல' என்று சாதிக்க எண்ணி 'ஒன்றுமே யில்லை' என்று முடித்துவிடுகின்றான்.

(10) பணம் இன்றைக்கிருக்கும் நாளைக்குப் போம், எல்லாரிடத்திலும் மாறிமாறிச்செல்லும். ஆகையால் நற்பெயரை இழந்தவனே உண்மையான ஏழை ஆகின்றான், அதனைக் கவர்ந்துகொண்டவனுக்கோ, யாதும் இலாபம் இல்லை—என்பதுபொருள்.

(11) என் மனதை நான் திறந்துவைத்தாலும் அதனுள் இவ்விடயம்பற்றி என் எண்ணங்கள் எவையென்று உன்னால் தெரிந்துகொள்ள இயலாது; எனின், என்னுடைய மார்பிலவை மறைந்திருக்கும் வரையில் நீ அதனைத் தெரிந்துகொள்ளவே மாட்டாய்—என்பது பொருள்.

(12) அவ்வியம், என்பது பொதுவாகப் பொறாமை என்று பொருள்படுமேனும், இங்கு,மனைவி வேறுபுருடனை இச்சித்திருக்கின்றாளோ வென்று கொள்கின்ற சந்தேக சஞ்சலங்களைக் குறிக்கின்றது. (Jealousy)

இந்தச் சந்தேகம் பிடித்தவுடன் மனமும் மெய்யும் தேய்ந்துபோவதுபற்றி அதுஒரு பூதமாக உருவகம் செய்யப்பெற்றிருக்கின்றது.

பச்சைக்கண், என்பது மஞ்சள்காமாலை என்னும் நோயைக் குறிக்கின்றது. காமாலையுடைய கண்களுக்குக் காண்பதெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுவதுபோல, இந்தச் சந்தேகங் கொண்டவர்களுக்கு, மனைவியின் சொல்லெல்லாம் செயலெல்லாம் அவளது விபசார விகாரங்களாகவே தோன்றுமாதலால், அவ்வியத்தைப் பச்சைக்கண்பூதம் என்று அழைக்கின்றான்.

என்று எக்காலும் அஞ்சியிருப்பவனுக்கு, எல்லையற்ற செல்வமும் கார்கால மன்ன வறியதேயம்.[17] நல்ல தெய்வங்காள், என் இனத்தவரெல்லார்தம் ஆன்மாக்களையும் அவ்வியத்தினின்று காமின்கள்.[18]

ஒத்:—ஏன் ஏன் இது? புதியபுதிய சந்தேகங்கள் கொண்டு சந்திரனது மாறுதல்களைத் தொடர்ந்து அவ்வியமுடையவொரு வாழ்க்கையே அமைத்துக்கொள்வேன் என்று எண்ணுகின்றனையோ? இல்லை இல்லை; ஒருமுறை ஐயங்கொள்வதெனின் அம்முறையே அதனைத் தெளிவித்துக்கொள்வதாம் [19]. நின் அனுமானத்திற்கிணையாக நீர்க்குமிழியன்ன உத்தேசங்களுக்கு எனது ஆன்மகாரியத்தை நான் திரும்பும்போது, என்னை ஒரு வெள்ளாட்டிற்குப் பதிலாக மாற்றிக்கொள்[20]—என் மனைவி அழகாக இருக்கின்றாள், நன்கு உண்கின்றாள், பலரோடிருக்க விரும்புகின்றாள், தாராளமாகப் பேசுகின்றாள், பாடுகின்றாள், ஆடுகின்றாள், நன்றாக நடனம் செய்கின்றாள் என்னச் சொல்வதால் என்னை அவ்வியமுடையவனாக்கியதாகாது. சீலமுள்ள இடத்தில் இவை பின்னுஞ் சீலமாம் [21]. அல்லது, என்னுடைய எளியதகுதிகளினின்று, அவள் அடங்காமற்போயினள் என்ற அச்சமேனும் ஐயமேனும் சிறிதளவுகூட நான் வருவித்துக்கொள்ளமாட்டேன் [22]. ஏனெனில், அவளுக்குக் கண்கள் இருந்தன, என்னைத் தேர்ந்துகொண்டாள் [23]. இல்லை; இயாகோ, ஐயங்கொள்வதன் முன் நான் பார்ப்பேன்; ஐயங்கொள்கின்றபொழுது ரூபிப்பேன்; ரூபித்ததன்மேல் இதுதவிர மேலொன்றுமில்லை—ஆசையையாவது அவ்வியத்தையாவது அப்பொழுதே அகற்றி ஆயிற்று.[24]

இயா:—அதுபற்றி எனக்குச் சந்தோஷம். ஏனெனில், உன்மீது எனக்கிருக்கின்ற அன்பையும் கடமையையும் பின்னும் கரவற்ற தன்மையில் நான் காட்டுதற்கு இப்பொழுது [25] காரணம் உடையவனாவேன். ஆகையால், நானுனக்குக் கடமைப்பட்டிருக்கும்படி, இதனை என்னின்று ஏற்றுக்கொள்—இன்னும் நான் ரூபிக்கப்பட்டதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. உன் மனைவியைப் பார்த்துக்கொள்; காஸ்ஸியோவுடன் அவளை நன்றாகக் கவனி; உன் பார்வையை இப்படி வைத்துக்கொள்—அவ்வியமாகவும் வேண்டா, கவலையே இல்லாமலும் வேண்டா. [26] நின் தாராளமான பெருந்தன்மை உனக்கு இயற்கையாய வண்மையினின்று வஞ்சனைபோக நான் இசையமாட்டேன் [27]. அதைப் பார்த்துக்கொள். எங்கள் தேசத்தின் சுபாவத்தை நான் நன்றாக அறி

இந்த அவ்வியமென்னும் ஒரு பூதமானது தான் பிடித்தவனுடைய மனத்தை, தனது உணவிற்கு உரிய ஊனாகத் தின்கின்றது. அவ்வியமென்பது மனைவியின் ஒழுக்கத்தைப்பற்றிய சந்தேகமேயொழிய, நிச்சயமல்ல. ஆகையால், அவன் மனதை ஒரு வழியாய்த் தின்று தீர்த்தபாடுமில்லாமல், விட்டபாடுமில்லாமல், கோபமும் நம்பிக்கையும் மாறிமாறி மேன்மேலும் புண்படுத்திப் பூனைபற்றிய எலியைப்போல், விடுவதுபோன்று விட்டுவிட்டுப் பிடிக்கும் இப்பரிகசம் செய்வதால், "தான் உண்ணும் ஊனைப் பரிகசிக்கும் பச்சைக்கண்பூதம் அது" என்கின்றான்.

(13) மனைவி தன்னை மோசம்செய்துவிட்டாள் என்பது நிச்சயமாகத் தெரிந்துவிட்ட கணவனுடைய நிலைமைக்கும், சந்தேகமட்டும் கொண்டிருக்கின்ற நிலைமைக்கும் உள்ளவேற்றுமையைக் காட்டி, பின்னதே மிகக் கொடியதென்று கூறுகின்றான்.

மனைவி, விபசாரம் செய்துவிட்டாள் என்பது நிச்சயமாகிவிட்டால், பிறகு அவளைக் காதலிக்கமாட்டானாகையால், அவள் கணவன் சஞ்சலமற்ற மனத்தனாகி ஆனந்த நிலையிலே இருக்கின்றானென்றே கூறலாம்—என்பது பொருள்.

பிழைத்தவள் = தன்னை வஞ்சித்தவள், மனைவி. "பார்ப்பன சாவி காப்புக்கடை கழிந்து, கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சி" என மணிமேகலையிலும் இச்சொல் இதே பொருளில் வழங்கப்பெற்றிருக்கின்றது.

(14) சந்தேகத்தால் பீடிக்கப்படுகின்றவன், மனைவியின்பால் ஆசை ஒருபுறமும் ஐயம் மறுபுறமும் பிய்க்க, வாழ்நாளெல்லாம் பாழாகி ஒவ்வொரு நாழியையும் எவ்வளவு சஞ்சலமுடன் கழிக்கவேண்டியவனாவான்--என்பது பொருள்.

(15) மிகமிகத் துயரமான நிலைதான் அது, என்று ஒத்தெல்லோவும் ஒவ்வுகின்றான்.

(16) வறியராயிருப்பினும் உள்ளது போதுமென்ற ஒரு திருப்தியே போதிய செல்வமாம்—என்பது பொருள.

(17) எல்லையற்ற செல்வம் இருப்பினும், அதனை இழக்கநேருமோ என்று அஞ்சியவண்ணமாயிருப்பதனிலும் வறிய வாழ்க்கை வேறில்லை-என்பதுபொருள். மேல்நாடுகளில்மாரிக்காலத்தில் பயிரின்றி நிலம் வறிதாயிருக்கும். மனைவியின் விபசாரத்தை அறிந்தவன், அவ்வளவுதான் தன் கதியென்று அமைதியுடன் இருந்துவிடலாம். மற்று அவளை இழக்கநேருமோ என்று ஐயுற்று அஞ்சியவண்ணமாயிருப்பவன், எந்நாளிலும் ஏழையே - என்பது இதன் குறிப்பு.

(18) தெய்வங்காள், ஒருவரும் இத்துணைக் கொடியதாகிய அவ்வியம் அடையாதபடி காப்பாற்றுங்கள்—என்பது பொருள்.

(19) சந்திரன் தேய்வதும் வளர்வதும் போல், சந்தேகம் மிகுவதும் குறைவதுமாகி உழல்கின்ற வாழ்க்கையை நடத்தமாட்டேன். உடனே ஆராய்ந்து இரண்டிலொன்று தெளிந்துவிடுவேன்—என்பதுபொருள்.

(20) பருத்துப்பருத்து உடைந்துவிடும் நீர்க்குமிழி போன்றஅனுமானங்களை ஆராய்ந்துகொண்டு கிடப்பதே காரியமாகக் கொள்கின்ற மூடன் நானல்லன். அப்படிச் செய்வேனாயின் என்னை ஒரு ஆட்டுக்கடா என்றே மதிக்கக்கடவாய் - என்பது பொருள். அசட்டுத்தனத்திற்கும் காமத்தின் மிகுதிக்கும் ஆட்டுக்கடா பேர்போனது.

(21) மனைவி சீலமுடையவளாயின், அழகு ஆடல் பாடல் முதலியவைகள் அவளுடைய சீலத்தை மேன்மை செய்யும். ஆகையால் இவைகளைக் கொண்டே அவள் ஒழுக்கம் கெட்டவளோ என்ற சந்தேகத்திற்கு நான் இடங்கொடுக்கமாட்டேன் - என்பது பொருள்.

(22) அவளுடைய அழகிற்கும் இளமைக்கும் நான் தகுதியற்றவன் என்பது உண்மையானாலும், அதுபற்றியே அவள் கற்பிற்கு அடங்காமற் போதல்கூடும் என்று எண்ணமாட்டேன்.

(23) என்னைப்பார்த்து மனப்பூர்வமாகத்தானே கலியாணஞ் செய்துகொண்டாள் அவள். ஆகையால், என்னை வெறுத்து வேறொருவனை இச்சிப்பாளென்று ஏன் நான் அஞ்சவேண்டும் - என்பது பொருள்.

(24) தகுந்தகாரணம் தென்படாமல் சந்தேகங்கொள்ளமாட்டேன். கொண்டால், அதை மனத்தில் மறைத்து வைத்துப் புழுங்கிக் கிடக்காமல், உடனே சோதித்து ரூபிக்கப்புகுவேன். கற்புடையவள் என்று ஏற்பட்டால் அந்நிமிடமே அவ்வியம் ஒழிகின்றது; அல்லள் என்று ஏற்

வேன்; வெனிஸ் நகரத்தில், தம் கணவன்மார்களுக்குக் காட்டத்துணியாத சேஷ்டைகளைக் கடவுள் பார்க்கும்படி விட்டுவிடுகின்றார்கள்; அவர்தம் உத்தமமான மனச்சாக்ஷி — செய்யாமல் விட்டுவிடுவதன்று, தெரியாமல் வைத்துக்கொள்வதே. 28

ஒத்:—அப்படிச் சொல்கின்றாயா நீ?

இயா:— உன்னைக் கலியாணம் செய்துகொண்டு தன் தந்தையை வஞ்சித்தாள் அவள். நின் தோற்றத்திற்கு அஞ்சி நடுங்கினவள்போல் அவள் தென்பட்டபோது அதிகமும் அதனைக் காதலித்தனள். 29

ஒத்:—அப்படியுஞ் செய்தாளவள்.

பட்டால் அவள்மீதிருந்த ஆசை ஒழிகின்றது. இதுதவிர நடக்கக்கூடியது வேறொன்றுமில்லை. ஆகையால் நான் மையலும் ஐயமுமாய் மாறிமாறி உழன்று புழுங்கி அவ்விய மென்னும் பூதத்திற்கு ஆளாவேன் என்று எண்ணாதே - என்பது பொருள்.

(25) இப்பொழுது - அவ்வியத்தால் அழிய மாட்டாய் என்பது தெரிந்தபின்.

(26) சந்தேகமும் இல்லாமல் நம்பிக்கையும் இல்லாமல் இரண்டிற்கும் பொதுவாக நீ அவளிடம் நடந்துகொள் - என்பது பொருள்.

(27) சந்தேகங்கொள்ளாத உன் நல்லகுணத்தையே ஆதாரமாகப்பற்றி உன் மனைவி உன்னை மோசஞ்செய்ய நினைப்பதைக் காண எனக்கு மனம்வரவில்லையாகையால் நான் இதனைச் சொல்கிறேன் - என்பதுபொருள்.

(28) தம் சேஷ்டைகளைக் கடவுள் பார்க்கின்றதே என்ற அச்சமில்லாதவர்; கணவன் பார்க்காமலிருந்தாற் போதும். மனச்சாக்ஷிக்குப்பயந்துஅவர் ஒன்றையும்செய்யாமல் விடமாட்டார். வெளியாகாமை விருப்பதொன்றே அவர் கவலை; பாவத்திற் கஞ்சாதவர்—என்பதுபொருள்.

(29) கரிய உன்உருவத்தைக்கண்டு அஞ்சினவள்போல் பொய்யே நடுங்கித் தன் தந்தையை வஞ்சித்து உன்னைக் காதலுடன் சந்தித்துவந்தவள் - என்பது பொருள்.

வில்லிபாரதம்

[427-வது பக்கத் தொடர்ச்சி]

கண்ணனல்லால் தெய்வமில்லை

முன்னேரிதழில், துச்சாதனனைப்பற்றி எழுதியபோது, எம்பெருமான் அத்தகையோனுக்கும் உருகியதை எடுத்துக்காட்டி, அந்தப் பெருமானின் அருட்குணத்தைப்பற்றிச் சில கூறினேன். கடவுளை மனிதவேடம் பூண்டு நடிக்கச்செய்து அவ்வெம்பெருமானது தத்துவத்தைக் கவிதை வழியாய் விளக்குதல் கம்பநாடர் போன்ற மகாகவிகள் எடுத்துக்கொண்ட விசாரம். ஆனால் கடவுள் மனிதனாகவேமுற்றும் நடித்தல் இயலாதாதலின், அவ்வப்போது அவனது அதிமானுட ஒளி வெளிப்படும்போது, அவ்வொளியைக் கவிதையென்னும் சூத்திரத்தால் கவர்ந்து சிறுமாமனிசர்க்குக் காட்டியீவது கவிதை வள்ளலாரின் தன்மை. அத்தொழிலை எத்துணைச்சிறப்புடன் இயற்றியுள்ளார் அக்கவியரசர் என்பதை ஸ்ரீமான் சேஷாலம் அவர்கள் எழுதிவரும் கட்டுரைகளைத் துணைகொண்டு ஆராய்ந்து தெளியலாம். எனினும், கம்பர் பெருமானும் ஈசனது சோதி தமதுசூத்திரத்தில் முற்றும் பிடிபட்டுளதென்று நம்பினாரல்லர். தமது சூத்திரத்துக்கும் அகப்படாததொரு மெய்ஞ்ஞானச் சோதியைப்பற்றிப் பலவாறு சிந்தித்து, வாலிவதைப் படலமென்னும் ஓவியத்தெழுதவொண்ணுக் காட்சியில் பலவாறு விரித்துரைத்துப் பெருமிதம் கொண்டவர் இறுதியில் உயுத்தகாண்டத் தொடக்கத்தில்,

ஒன்றே யென்னில் ஒன்றேயாம்
பலவென் றுரைக்கில் பலவேயாம்
அன்றே யென்னின் அன்றேயாம்
ஆமென் றுரைக்கில் ஆமேயாம்
இன்றே யென்னின் இன்றேயாம்
இலதென் றுரைக்கில் இலதேயாம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா.

என்று தம்முடைய சூத்திர சாத்திரங்களெல்லாம் உண்மையை அறுதியிடவல்லாதனவாய் ஊமன் கனவினும் பழுதாகியொழிவதைக் குறித்தார் கவியரசர். எனினு மவ்வாறுகூறியதிலும் தமது சூத்திரநுட்பத்தையேசிறப்புறப் பெறவைத்தார். பிணக்கமிகு சமயங்கள் பலவும் உண்டாகவும் அல்லையாகவு மான ஒரு ஐயநிலையை விளைவிக்க, அந்நிலையிலும் உண்மையுணர்வினோடு, "நமக்கிங்கென்னே பிழைப்பம்மா" என்று, 'இவ்வாறு பலவித மாறுபாடுகள் நிலவி உண்மையொளிபரவாத இவ்விருள்தரு மாஞாலத்தில் இருந்துவாழும் வாழ்க்கையின் வியர்த்தத்தைக் குறிக்கப்போமோ? என்று ஞானமொழி யியம்புகின்றார். ஆதலின் எம்பெருமான் இவ்வுலகுஉய்யுமாறு தானே பிறந்து, தனது அமிசத்தைப் பிறப்பிக்க வைத்தாலும், இம்மாஞாலத்தின் இருள் அதனை மறைக்கப்போதுமானது என்பதும் அவர் தம் நெஞ்சக்கிடக்கை.

ஆரானும் யாதானும் செய்ய அகலிடத்தை
ஆராய்ந் ததுதிருத்தல் ஆவதோ?

என்று கம்பநாடரது பரமாசாரியனை காரிமாறப் பிரானும் கூறினாரே.

ஆனால், இராமாயணத்தில் பல்கோடி நூறாயிரம் அரக்கர்களையும்ஓரம்பினால்கொன்றருளிய சக்திசொரூபத்தைக்கண்ணால்கண்டும், எம்பிரானது தன்மையை மக்கள் அறியமுடியாமற்போயினது விந்தையே. ஏழுலகங்களையும் வென்ற இராவணனை வாலினால்தடிந்த வாலியைக் கொன்றதைக்கேட்டும், கண்டும், எல்லோரும் அவ்வெம்பெருமானது அதிமானுட ஒளியைக் கண்டுகொண்டனர் என்பதற்கில்லை. இஃதெல்லாம் விந்தையே. இதைப் போலவே ஸ்ரீபாகவதத்திலும், கன்றால் விளவின் கனியுதிர்த்ததும், குன்றால் நிரையின் கணம்காத்தது மாகிய பெருஞ் செயல்களைத் தாம் கண்டும் யாதவர் மாயை நீங்காதிருந்தனர். அறி

வுவளராத காலத்திலிருந்த அம்மக்களுக்குப் பிரத்தியக்ஷமான தன் தெய்வீகத்தைக் காட்டியும், குரக்கினத்தவரும் ஆயர்தாமும் அதனைக் காணாதவராயினர்.

மாபாரதத்தில், மேற்கூறிய இரு பெருங் காப்பியங்களிற் போலல்லாமல், அறிவுவளர்ச்சிமிக்க ஒரு நாகரிக உலகத்தினுள் கடவுள் புகுகின்றான். ஆதலின் அவ்வுலகத்தில், பெருமாள் தனது சக்தியை ஒரு சிறிது காட்டினவளவில் யாவரும் உண்மையை உணர்ந்து உய்தல் வேண்டுமன்றோ? ஆனால், அவ்வுலகிற்றான், எத்தகைய ஆற்றலும், சௌசீல்ய சௌலப்யாதி குணங்களும் இலைமறை காய்போல், விதியுடையோர்க்கே புலனாயிற்றேயன்றி, அவ்வெம்பெருமானென்னும் தத்துவம் பலருக்கும் புலனாகாமல் ஒழிந்தது.

எம்பெருமானது சக்தி சொரூபத்தை நாம் முழுதும் காண்பது விசுவரூப தரிசனத்தின் போதாகும். ஒலியுடைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து, அவைகளை மிகுதியான ஒலியுண்டாம்படி வெகு திறமையுடனே தொகுத்து, ஒலிமிக்க பாடல்கள் முப்பதில், கடலைப்போல் சற்றேனும் தயக்கமின்றிப் பாயும் அடிகளினால் அண்டங்களெல்லாம் இடந்தெரியா தொளியும் பிரளய கோஷத்தைப் பெறவைத்துள்ளார். அப்பகுதியின் ஒலிச்சிறப்பைப் பற்றியும், கவிவன்மையைப் பற்றியும் பின்னால் ஆராய்ந்து எழுதுவேன். இவ்விடத்தில் இரண்டு மூன்று பாக்களை மாத்திரம் ஸ்மரித்தல் நலம்.

எப்புவி நிற்பன எக்கிரி நிற்பன
    எக்கடல் நிற்பனவென்
றிப்புவ னத்துயிர் முற்று மயக்குற
    உட்கினர் எய்த்திமையோர்
மைப்புய லொத்தொளிர் பச்சை நிறத்தினன்
    வர்க்கம லர்க்கழலால்
ஒப்பற மட்குழி யுற்ற வரைப்பட
    ஒத்திமி தித்தலுமே.

மேலெ ழுங்கதிர் வாளுறை போம்படி
    வீசின வான்புடையே
தோலின மேந்தின நீள்கவ ணேந்தின
    சோரிகள் சூழ்ந்திடவே
ஞாலமெ லாம்பொரு தோமரம் வாங்கின
    நாவொரு மூன்றனவாம்
சூலமொ டோங்கின பாசமொ டோங்கின
    சூழ்சில பூங்கரமே.

என்று அண்டாகாரமாகப் பரவியது எம்பெருமானது தோற்றத்தின் வருணனை. ஆனால் அத்தகைய தோற்றத்தைக் கண்டும், கண்டோர் தம் உள்ளத்தில், எல்லாம் எம்பெருமானாகிய உண்மை நெடுநேரம் தங்கவில்லை. தான் இருந்தஇடம் பெயராமல் நிற்கவல்லனாயிருப்பதும் அண்டங்களெல்லாம் பிறழாது முன்னிருந்தபடியே கூடிய அந்நிலையும், சுயோதனனுக்கு அவன்கண்ட காட்சியெல்லாம் தந்திரத்தின்பால் பட்டதென்றும், பொய்த் தோற்றமென்றும், ஜாலமென்றும் அறிவுறுத்தின. மற்றையோர் யாவரும் முதலில் கதிகலங்கி அறிவிழந்து உணர்வுற்றனரேனும், அவர்களும் நாளடைவில் சுயோதனன் நினைத்தவாறே நினைத்தனர் போலும். ஆதலின் எம்பெருமான் இவ்வாறு தனது சக்திரூபத்தைக் காட்டியும், மனிதர் தம் அறிவு அதனை ஏற்றுக் கொள்ளாததாயிற்று. சுயோதனனைக் கொல்லாதிருந்ததற்குக் காரணம் தனது வாய்மையே என்று அவர்,

அஞ்சினம் நின்னையழித்திட அன்று
    பெருஞ் சமர்வாய்
வெஞ்சுட ராயுதம் ஒன்று மெடுக்கிலம்
    என்றுவி ளம்பியதும்

என்று கூறியதை ஆராய்வார் அங்கு யாருமில்லை.

மற்றுமோர் சமயம் கடவுள் தனது சக்தியைக் காட்டியது, சற்று நேரத்தில் அந்தி படுவதாயிருப்பவும், சயத்திரதனைத் தோற்றங்காணாத நிலையிலாகும். அப்பொழுது,

பாராழி யவலமறப் பாண்டவர்தம்
    இடர்தீரப் பார்த்தன் வாழப்
போராழி யணைத்துயிலும் பெருமிதமும்
    உடன்மறந்து பிறந்த மாயோன்
ஓராழி யெழுபரித்தே ருடையானை
    மாயையினால் ஒழிக்க வெண்ணிக்
கூராழி பணித்தலுமக் களம்போலச்
    சிவந்தது குடபா லெங்கும்.

மிகப் பிரத்தியக்ஷமாக, எல்லோரும் காண எம்பெருமான் தனது சக்தியைக் காட்டியருளினன். கண்ணபிரானே ஆழிகொண்டு மறைத்தனர் என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அதைச் சுயோதனனே ஒத்துக்கொள்கிறான். §

முடையெடுத்து நவநீதம் தொட்டுண்டும்
    கட்டுண்டும் முதனாள் நாகக்
குடையெடுத்து மழைதடுத்தும் விரகினுக்கோர்
    கொள்கலமாம் கொடிய பாவி
படையெடுத்து வினைசெய்யே னெனப்புகன்ற
    மொழிதப்பிப் பகைத்த போரின்
இடையெடுத்த நேமியினால் வெயில்மறைத்
    தானின்னமிவன் என்செய் யானே.

என்றான். ஆயினும், அவ்வாறு "நேமியினால் வெயிலை மறைத்தவன் இறைவனே யாவன்" என்றேன் சுயோதனன் கருதவில்லை? எனின், இவ்வளவு பெரிய சக்தியும் தோன்றியது போரில் புகுந்த இருதிறத்தாருள் ஒரு திறத்தார்க்கு உதவி செய்கின்ற பக்ஷபாதமாதலின், கடவுளது சத்தத்துவம் ஒருநிலை திறம்பாமல் நிஷ்பக்ஷபாதமாக இருக்கவேண்டியதுபற்றி இவ்வாறு ஒரு தலையாக நின்ற அப்பெருஞ்செயல், உண்மையில் கடவுளின் செயல் ஆகாதென்னச் சுயோதனனது அறிவு முடிவுகட்டியது. உண்மையில், இது நெறி திறம்பிய செய்கையென்று அவன் எண்ணிய

---

§ வடமொழி நூலில், கண்ணன் சக்கரத்தினால் வெயிலை மறைத்ததாகச் சொல்லப்படவில்லை. 'இருளையுண்டு பண்ணினார்' என்று மாத்திரமே கூறப்பட்டுள்ளது - ம. வி. ராமானுசாச்சாரியர் அவர்களின் பாரத மொழிபெயர்ப்பு.

தணாற்றான், அதனைக் கடவுள் செயலென்று அவனால் கருத இயலவில்லை. இடையெடுத்த நேமியினால் வெயில் மறைத்தான்; இன்னமிவன் என் செய்யானோ?' என்று 'கண்ணன் எதனையும்செய்வன்' என்னும் கடவுளது சர்வ சக்தத்துவத்தையும் ஒரு சிறிது கண்டு கொள்கிறான். ஆனால் அச்செயலில் தோன்றிய அநியாயம் அவ்வொரு நல்லுணர்ச்சியையும் அவித்தது. மேலெழுந்தவாரியாக நோக்கினால், கண்ணன் தமது உரை பொய்யாமாறு படையெடுத்ததும், நெறிதிறம்பியசெய்கை யெனவே தோன்றும். கன்னன் முதலானோரும்,

> உந்திரதத் தனிவலவன் உபாயத்தால்
> வருணன்மகன் உயிர்மாய்த் திட்டான்†
> மந்திரமொன் றறிவித்து வயப்புயமா
> யிரத்தோனை மடிவித் திட்டான் *
> தந்திரம்மெய் மயங்கிவிழச் சங்கமு
> முக்கினான் தபனன் மாய
> இந்திரசா லமுஞ்செய்தான் இந்திரன்சேய்
> வெல்லாமல் யார்வெல் வாரே.

என்று கண்ணன் செய்த வஞ்சனையை எடுத்துக் காட்டினர். ஆனால் அவ்வஞ்சனை உண்மையில் வஞ்சனையல்லவென்றும், அறத்தின் பயனென்றும் அவர்களறியவேண்டின், அவர்கள் சிறிதளவாவது ஆன்ம சிந்தனையுள்ளவர்களாக இருந்திருக்க வேண்டுமன்றோ? ஆனால் ஆன்ம சிந்தனை யென்பது சுயோதனனது குணத்திற்கு மாறான விஷயம். ஆதலின் அவன் உண்மையை ஏற்காமல், 'முன்னர் நாகக்குடை யெடுத்ததும் இன்று படையெடுத்ததும் எல்லாம் விரகு (தந்திரம்)' என்றெண்ணி, 'விரகினுக்கோர் கொள்கலமாம் கொடிய பாவி' என்று தன் பாவத்தைக் கண்ணன் மீதேற்றி யுரைத்தானேயன்றி, இத்தகைய அற்புதங்கள் இறைவனது அருள் என் றெண்ணினானில்லை.

ஆனால், கர்ணன், துரோணன் முதலிய இதய ச்ரேஷ்டர்கள் இவ்வருட்டிறனைக் கண்டுகொண்டனர். விசுவரூப தரிசனம் செய்தபோதே கன்னன் எம்பெருமானைப் பலபடியாலும் போற்றி, அவன் தெய்வமே யென்பதை உணர்ந்து, அவன் நின்ற பக்கமே வெற்றி யென்றும் ஓர்ந்து, 'பழிதீர் வென்றிப் பாண்டவர்'' என்று கூறுகின்றான். பதினான்காம் போரில் கண்ணன் படை யெடுத்தபின், துரோணனும் உண்மையை ஊகித்தறிந்தான். கடவுளே தனது உரை பொய்யாமாறு படைகொண்டு தருமன் பக்கலில் உதவுவானெனின், தானும் அக்கடவுள்செய்ததுபோலவே, தனது சிறிய கடமைகளைத் தவிர்த்துத் தரும தேவதைக்காகத் தன் உயிரை நீத்தலே கருமமென்று நின்றான். ஆயினும் அவனுக்கும் இடையில் ஐயம் நிகழ்ந்தது. அதாவது, மற்றாம்நாள் (பதினைந்தாம் நாள்) போர்த்தொடக்கத்தில், பல இருடிகள் வந்து துரோணனை அண்மிச் 'சிலைதொடேல்,' என்று கூறியபோது, மற்றவன், 'இதுவும் கண்ணனது சூழ்ச்சியோ?' என்று ஐயுற்றான். ஆனால், இறுதியில், தருமத்தின்பொருட்டுத் தன்தலை யீவதே கடனென்று கருதி, அத்திர சத்திரங்களை யெறிந்து ஞானியாய் நின்றான் உபநிடத முனிவன்.

† இவன் ஈறிலாத வரம் பெற்றவன். ஆனால் நிராயுதன் மேல் தனது ஆயுதத்தை விட்டால் தலையற்று விழும் சாபமும் பெற்றுள்ளான். அவனது கதாயுதத்தைத் தன்மார்பிலேற்று அவனை முடியற்று வீழக்கண்டார் கண்ணன்.

* சகஸ்ரவாகு-இவனும் பதினாலாம் போரில் விசயனை எதிர்த்தவன். கண்ணன் விசயனுக்கு, ஆயிரந்தோள்களையும் ஒருநொடியில் அற்றுவிழச் செய்யும் மந்திரத்தை அருளினர்.

கலித்தொகை

[446-வது பக்கத் தொடர்ச்சி]

மருதக்கலி—13

பரத்தையர் சேரியிற் சென்றுவந்த தலைவனோடு ஊடிய காமக் கிழத்தி ஊடல் தீர்கின்றவளாய்க் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை
யின்மல ரிமிர்பூதுந் துணைபுண ரிருந்தும்பி
யுண்டுறையுடைந்தபூப்புனல்சாய்ப்பப்புலந் தூடிப்
பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென
அதுகைவிட்டகன்றோரீஇக்காக்கிற்பான்குடைநீழற்
பதிபடர்ந்திறைகொள்ளுங்குடிபோலப்பிறிதுமொரு
பொய்கைதேர்ந்தலமரும் பொழுதினான் மொய்தப
இறைபகை தணிப்பவக் குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுன னீங்கவந் தத்தும்பி யம்மலர்ப்
பறைதவிர் பசைவிடூஉம் பாய்புன னல்லூர

நீங்குங்கா னிறஞ்சாய்ந்து புணருங்காற் புகழ்பூத்து
நாம்கொண்ட குறிப்பிவணலமென்னுந்தகையோதா
னெரியிதழ் சோர்ந்துக வேதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறுங் கண்ணியை யீங்கெம்மில் வருவதை

சுடர்நோக்கிமலர்ந்தாங்கேபடிற்கூம்புமலர்போலென்
றொடர்நீப்பிற்றொகுமிவணலமென்னுந்தகையோதா
னலர்நாணிக் கரந்தநோய் கைம்மிகப் பிறர்கூந்தன்
மலர்நாறு மார்பினை யீங்கெம்மில் வருவதை

பெயினந்திவறப்பிற்சாம்புலத்திற்குப்பெயல்போல்யான்
செலினந்திச்செறிற்சாம்புமிவளென்னுந்தகையோதான்
முடியுற்ற கோதைபோல் யாம்வாட வேதிலார்
தொடியுற்ற வடுக்காட்டி யீங்கெம்மில் வருவதை

ஆங்க

ஐய வமைந்தன் றனைத்தாகப் புக்கீமோ
வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்
முகைமலர்ந் தன்ன முயக்கிற் றகையின்றே
தண்பனி வைக லெமக்கு.

தரவு

(வரி 1 - 10) பன் மலர் - பலமலர்களைக் கொண்ட, பழனத்த - பொய்கையிலுள்ள, பாசு அடை தாமரை - பசுமையான இலைகளைக் கொண்ட தாமரையினது, இன்மலர் - கண்ணுக்கினிய மலர்களில், இமிர்பு ஊதும் - ரீங்

காரம் செய்துகொண்டு ஊதுகின்ற, துணை புணர்- பெண் வண்டுகளைக் கூடும், இரும் தும்பி - பெரிய ஆண்வண்டா னது, உண் துறை - பலரும் நீருண்ணும் துறையை யுடைய அப்பொகையில், உடைந்த - புதிதாக மலர்ந்த, பூ- (தான் நுகரவிரும்பிய) பூவை, புனல் சாய்ப்ப-பெருகி வந்தநீர் சாய்ப்பதால், புலந்து,-வெறுத்து, ஊடி- அந்த நீரோடு ஊடல் கொண்டு, பண்புடை நல் நாட்டு - பண் புள்ள நல்ல நாட்டிற்கு, பகைதலை வந்தென - பகைவன் வந்தனன் என்று, அது கைவிட்டு - அந்த நாட்டை விட்டு, அகன்று ஓரீஇ - நீங்கிப்போய், காக்கிற்பான் குடை நீழல்- தம்மைக் காக்கக் கூடிய அரசனின் குடை நிழலிலுள்ள, பதி படர்ந்து - வேறொரு ஊரை இருப்பாகக் கொள்ள நினைத்து, இறை கொள்ளும் குடி போல - திரிதலைச் செய்யும் குடிமக்களைப் போல, பிறிதும் ஒரு பொய்கை தேர்ந்து-வேறும் ஒரு பொய்கையை ஆராய்ந்து, அலமரும் பொழுதினன்- சுற்றி அலையும் பொழுதிலே, மொய் தப- (வந்த அரசனுடைய) பலம் கெட, இறை - தமது அரசன், பகை தணிப்ப-அப்பகைவனது பகையை நீக்க, குடி பதிபெயர்ந்தாங்கு - அக்குடி மக்கள் தம்முடைய பழையவூருக்குத் திரும்பியதுபோல நிறை புனல் நீங்க - நிறைந்த புதுநீர் நீங்க, வந்து அத்தும்பி - வந்து அந்த வண்டு, அம்மலர் - அப்பூவின்மீது, பறை தவிர்பு - பறத்தலை ஒழித்து, அசைவிடூஉம் - தங்கும், பாய்புனல் நல் ஊர - பாய்கின்ற நீரையுடைய நல்ல ஊருக்குத் தலைவனே.

பழனம் பரத்தையர் சேரியாகவும், பன்மலர் பல பரத்தையராகவும், தாமரை இன்மலர் தலைவன் விரும்பும் அழகிய பரத்தையராகவும், தும்பி தலைவனாகவும், துறை பாத்தையராகவும், உடைந்த பூ முதற் பூப்பு நிகழ்ந்த இளம்பரத்தையாகவும், புனல் சாய்த்தல் - காதற் பரத்தை புதிய பரத்தையை ஏசுதலாகவும், தும்பி புலந்து ஊடல் காதற் பரத்தையோடு தலைவன் ஊடல் கொள்ளுதலாகவும்,தும்பி பிறிதும் ஒரு பொய்கை தேர்ந்து அலமரல் - தலைவன் வேறொரு பரத்தையர் சேரியை நாடி அலைதலாகவும், நிறை புனல் நீங்கல் காதற் பரத்தை அவ்விடத்தை விட்டு நீங்குதலாகவும், தும்பி அப்பூவை அடைதல் தலைவன் தனிக்கினிய அப் பரத்தையை அடைதலாகவும் உள்ளுறை கொள்க.

காமக்கிழத்தி சேரிப் பரத்தையின் மகள்; தனக்கினிய ஒரு தலைவனை மணங்கொண்டு நெறிபிறழாமல் வாழ்பவள். இற்பரத்தை எனப்படுபவளும் இவளே.

காதற்பரத்தையும் சேரிப் பரத்தையின் மகளே; தனக்கினிய ஒரு தலைவனைப் பலர்அறிய மணங்கொள்ளாமல் நெறிபிறழாமல் வாழ்பவள்.

சேரிப் பரத்தை எனினும் பரத்தை எனினும் ஒக்கும்.

தாழிசை.

(வரி 11-14) எரி இதழ் - நெருப்புப் போலும் நிறத்தையுடைய இதழ்கள், சோர்ந்து உக - வாடி உதிர, எதிலார் புணர்ந்தமை - பரத்தையரைக் கூடிய தன்மையை, கரி கூறும் கண்ணியை - (எமக்குச்) சாட்சி சொல்லும் தலைமாலையை யுடையவனாய், ஈங்கு எம் இல் வருவதை - இங்கே எம்முடைய வீட்டிற்கு வருகின்ற நிலைமை, இவள் நலம் - இவளது அழகு, நீங்குங்கால் - நாம் நீங்கும் பொழுது, நிறம் சாய்ந்து - நிறம் கெட்டு, புணருங்கால் - கூடும்பொழுது புகழ் பூத்து - பிறர் புகழ்தலால் பொலிவு பெற்று, நாம்கொண்ட குறிப்பு - நாம் மனத்தே கொண்டே எண்ணத்தின் நிலைமையை அனுசரித்ததாகும், என்னும் தகையோ - என்னும் உள் எண்ணமோ?

தான் - அசை.

(வரி 15-18) அலர் நாணி - பிறர் கூறும் அலருக்கு வெட்கப்பட்டு, கரந்தநோய் - மறைத்த நோய் கைமிக - (ஒழுக்கத்து எல்லையைக்) கடக்கும்படி, பிறர் கூந்தல் - பரத்தையர் கூந்தலிலிருக்கும், மலர் நாறும் மார்பினை - பூ மணம் வீசும் மார்பையுடையவனாய், ஈங்கு எம் இல் வருவதை - இங்கு எம்முடைய வீட்டில் வருவது, சுடர் நோக்கி மலர்ந்து - சூரியனை நோக்கி மலர்ந்து, படில் கூம்பும் - அச்சூரியன் மறையில் மூடிக்கொள்ளும், மலர் போல் - மலரைப்போல, என் தொடர் - எனது தொடர்ச்சி, நீப்பின் - நீங்கினால் (குறைந்து), தொகும் - (என்சேர்க்கை உண்டானால்) கூடும், என்னும் தகையோ- என்னும் உள் எண்ணமோ ?

தான் - அசை.

(வரி 19-22) முடி உற்ற - முடியிலே பொருந்திய, கோதைபோல் - மாலை போல, யாம் வாட - யாம் வாட, எதிலார் - நின் பரத்தையரது, தொடி உற்ற - தொடியினால் உண்டான, வடு காட்டி - தழும்பைக் காட்டிக் கொண்டு, எம் இல் வருவதை - எமது வீட்டிற்கு வருகின்ற நிலைமை, பெயின் நந்தி - (மழை) பெய்தால் வளர்ந்து - வறப்பில் சாம் - வறண்டுவிட்டால் அழியும் புலத்திற்கு - பயிருக்கு, பெயல் போல் - மழையைப் போல, இவள் நலம் - இவளது அழகு, யான் செலின் நந்தி - யான் இவளிடம் சென்றால் வளர்ந்து, செறில் சாம்பும் செல்லாது வருத்தினால் கெடும், என்னும் தகையோ - என்னும் உள் எண்ணமோ.

தான் - அசை.

புலம் - ஆகுபெயர்.

தனிச்சொல்.

(வரி - 23) ஆங்க - அசை.

சுரிதகம்.

(வரி 24-27) ஐய - அழகாக, அமைந்தன்று - பொருந்தி இருக்கின்றது, அனைத்து ஆக - அந்த அணியோடு கூடவே, வெய்யாரும் - உன்னை விரும்புவாரும், வீழ்வாரும் - நீ விரும்புகின்றவருமாகிய பரத்தையர், வேறாக - மனம் வேறுபடும்படி இங்கு நில்லாது, புக்கீமோ - அவர் வீட்டிற்குள் செல்லுக. கையின் முகை மலர்ந்தன்ன - (மலர வேண்டிய காலத்தில் மலராமல்) கையினால் மொக்கு மலர்த்தாற்போன்ற, முயக்கின்-இனியதல்லாத முயக்கத்தைக் காட்டிலும், (ஐய - தலைவனே), எமக்கு தண் பனி வைகல் தகையின்றே - எமக்குக் குளிர்ச்சி பொருந்திய பின்பனிக்காலம் தகுதி உடையதல்லவா ?

தனித்தோர்க்கு முற்றிய கடும்பனியாகிய பின்பனி ஆற்றற்கு அரிது ஆகலான் இவ்வாறு கூறினள்.

கருதக்கலி 14

தலைவன் பரத்தையிற் பிரிந்துவந்து தனது மகனைத் தூக்கி அணைத்துக்கொண்டான். அதனைக்கண்ட ஊடல் உள்ளத்தளாய தலைவி அவன் தன்னைவிட்டுப் பிரியான் என்பதை நன்கு உணர்ந்து அவனைப் பிள்ளையை விட்டுத் தனக்கினிய பரத்தையின்பால் போகும்படி சொல்லியதைக் கூறுவது இச்செய்யுள்.

புள்ளிமி ழகல்வய லொலிசெந்நெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளித ழூறநீடி வயங்கிய வொருகதி
ரவைபுக ழரங்கின்மே லாடுவா ளணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம் போற்றோன்றுந்
தகைபெறு கழனியந் தண்டுறை யூரகேள்

அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பதாற்
றோய்ந்தாரை யறிகுவேன் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ

புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவாணன்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ

கண்டேயெம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவாண
னண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ

எனவாங்கு,

பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் சென்றீ யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து.

தரவு

(வரி 1-6) புள் இமிழ் - பறவைகள் ஒலிக்கின்ற, அகல் வயல் - அகன்ற வயலிலே, ஒலி செந்நெல் இடை பூத்த- ஒலிக்கின்ற செந்நெல்லின் நடுவே மலர்ந்த, முள் அரை- முள்ளை அடிப்பாகத்திலே பெற்ற, தாமரை முழுமுதல்- ஒரு தாமரைப் பூ முழுவதையும், சாய்த்து - சாய்த்து, அதன் வள் இதழ் உற - அதன் வளப்பம் பொருந்திய இதழைப்பொருந்தும்படி, நீடி வயங்கிய - நீண்டு விளங்கிய, ஒரு கதிர் - ஒரு செந்நெற் கதிரானது, அவை புகழ் - (நாடகம் காணும்) அவையினர் புகழும், அரங்கின்மேல் - நாடக மேடையின்மேல், ஆடுவாள் அணி நுதல் - ஆடுபவளுடைய அழகிய நெற்றியில், வகைபெற செரீஇய - அழகுபெறச் செருகிவைத்த, வயந்தகம்போல்-வயந்தகம் என்னும் அணிபோல, தோன்றும் தகைபெறு கழனி - தோன்றும் பெருமைபெற்ற கழனியையுடைய, அம் தண் துறைஊர கேள்-அழகிய குளிர்ச்சிபொருந்திய நீர்த்துறைகளையுடைய ஊரையுடையவனே கேட்பாயாக.

வயந்தகம் என்பது 'தலைக்கோலம்'என்னும் தலையணியிலிருந்து நெற்றியில் தொங்கும் தொங்கலாகிய பொன் குஞ்சு. இது மகளிர் அணி.

தாழிசை

(வரி 7 - 10) அணியொடு வந்து - நீ நின் பரத்தையர்பால் கொண்ட ஆபரண அலங்காரத்தோடு வந்து, ஈங்கு எம் புதல்வனை கொள்ளாதி - இங்கு எமது மைந்தனை எடாதே, மணி புரை-பவளம் போன்ற,செவ்வாய்- அவனது சிவந்த வாயிலிருந்து ஒழுகும் நீர், நின் மார்பு அகலம் - நினது மார்பாகிய அகன்ற இடத்தை, நனைப்பது-நனைக்கின்றது, ஆல் - ஆகையினால், தோய்ந்தாரை- நின் மார்பைக் கூடியவரை, அறிகுவேன் யான் என - அறிவேன் யான் என்று, கமழும் நின் சாந்தினல் - மணக்கின்ற நினது சந்தனத்தினல், குறிகொண்டாள் - பிறர் முயக்கத்தை அறிந்துகொள்ளும் நின் பரத்தை, சாய்குவள் அல்லளோ - வருந்தமாட்டாளோ ?

அறிந்துகொள்வது உறுதியாதலின் குறிகொண்டாள் என இறந்தகாலத்தால் கூறினள்.

(வரி 11 - 14) எம் புதல்வனை புல்லல் - எமது மைந்தனைத் தழுவாதே, புகல் அகல் நின் மார்பின் - பரத்தையர் புகழும் அகன்ற நினது மார்பிலுள்ள, பலகாழ் - பல வடங்களைக்கொண்ட, முத்து அணி ஆரம் - முத்துக்கள் வரிசையாயுள்ள மாலையை, பற்றினன் - பற்றி, பரிவாணன் - அறுப்பவனாய் இருக்கின்றான், (அவ்விதம் அவன் அறுத்தால்) மாண் இழை மடநல்லார்-மாட்சிமைப்பட்ட அணிகளைக்கொண்ட இளமை பொருந்திய பரத்தையர், முயக்கத்தை - புணர்ந்த புணர்ச்சியை, நின் மார்பின் பூணினல் - நினது மார்பிலே கிடக்கின்ற அணியாலே, குறிகொண்டாள்-அறிந்துகொள்ளுபவள், புலக்குவள் அல்லளோ - வெறுக்கமாட்டாளோ ?

இத்தாழிசையின் பின்னிரண்டு அடிகளிலிருந்து,தலைவியால் குறிக்கப்படுபவள் காமக்கிழத்தி அல்லது காதற்பரத்தையாக இருத்தல் வேண்டும்.

பற்றினன் - முற்றெச்சம்.

(வரி 15 - 18) கண்டே-நேரில் கண்ட காரணத்தால், எம் புதல்வனை கொள்ளாதி-எமது புதல்வனை எடாதே, நின்சென்னி - நினது தலையில், வண்டுஇமிர் - வண்டுகள் ஒலிக்கின்ற, வகை இணர் - அழகிய பூங்கொத்துக்களை, வாங்கினன் - வாங்கி, பரிவாணன் - அறுப்பவனாய் இருக்கின்றான், (அவ்விதம் அவன் அறுத்தால்) நண்ணியார் காட்டுவது இது என-உன்னைக் கூடியவரைக் காட்டுவது இக்கண்ணியே என்று, கமழும் நின் கண்ணியால்-மணக்கின்ற நினது தலைமாலையால், குறிகொண்டாள் - பிறர் முயக்கத்தை அறிந்துகொள்பவள்,காய்குவள் அல்லளோ- கோபிக்கமாட்டாளோ.

வாங்கினன் - முற்றெச்சம்.

தனிச்சொல்

எனவாங்கு - அசை

சுரிதகம்

(வரி 20. 23) பூங்கண் புதல்வனை - அழகிய கண்களையுடைய புதல்வனை, பொய் பல பாராட்டி - பொய்யாகப் பலவற்றைச் சொல்லிக் கொண்டாடி, நீங்காய் - நீங்கு, இகவாய் - எமது இல்லைவிட்டுச்செல், நெடும் கடை நில்லாதி - நெடிய வாயிலில் நில்லாதே,அணி சிதைப்பான்- உன் அலங்காரத்தைக் கெடுப்பவனாகிய, எம் புதல்வனை தந்து - எமது புதல்வனைக் கொடுத்துவிட்டு, ஆங்கே - பரத்தையர் சேரியில், அவர் வயின்-அப்பரத்தையர்பால், சென்றீ - செல்லுவாய்.

நீங்காய், இகவாய் இரண்டும் விதிவினைகள். அவர்-ஈண்டுக் காமக்கிழத்தி அல்லது காதற்பரத்தையைக் குறிக்கின்றது. இழிவினல் ஒருமைக்குப் பன்மை வந்தது.

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல்பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

பெண் ஆண் ஆனாள்:-செக்கோ ஸ்லோவாக்கிய நாட்டுப் பிரபல வீர மாதான கோபுக்வா என்பவள் சத்திர சிகிச்சை செய்து முற்றிலும் ஆணாக மாறிவிட்டாளாம். அதற்காக அவள் பேரைக் கோபக் என்று மாற்றிக் கொண்டாளாம். இப்பொழுது ஆண் உடை தரித்து கொண்டு ஆடவர் போலவே அவள் நடந்து வருகிறாளாம். கோபக்குக்கு வயது 21-தான்.

* * *

பிரிந்தவர் கூடினர்:—பிரான்சில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் ஆங்கிலேயரும் ஒரு பிரஞ்சு மாதும் கலியாணம் செய்து கொண்டார்கள். ஆனால் கோவிலில் கலியாணம் நடந்தபின் வீட்டுக்கு வரும்பொழுது ஏற்பட்ட ஓர் அற்பமான வருத்தத்தால் இருவரும் பிரிந்துவிட்டனர். ஒருவரை ஒருவர் பின் பார்க்கவில்லை. ஆனால் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்ததில் குறைவில்லை. இப்பொழுது இருபத்தைந்து ஆண்டுகளுப்பின் ஒரு நண்பரின் உதவியால் இருவரும் கணவன் மனைவியாகக் கூடிவாழத் தொடங்கியிருக்கிறார்கள்.

* * *

நினைத்ததும் மழை:—போலந்திலே ஓர் விவசாயி இருக்கிறார். நினைத்தபோது மழை பெய்யுமாறு செய்ய அவருக்குஓர் இரகசியம் தெரியுமாம். ஏதோ சில மூலிகைகளையும் மருந்துகளையும் கலந்து சில மந்திரங்களைச் சொல்லி பூமியில் கொட்டியதும் அதனால் ஆகாசத்திலே பல திசைகளிலும் பரவிக்கிடக்கும் மேகங்கள் ஆகர்ஷிக்கப்பட்டு, மழையாகப் பொழியுமென்று அவர் சொல்லுகிறார். மந்திரங்களின் உண்மை எப்படியாயினும், அவர் இதுவரை மூன்று முறை தம்முடைய முறையால் வரவழைத்துவிட்டார்.

Indo-Commercial Bank, Ltd.,

Mayavaram.

Capital, Reserves, etc., as at 31st December 1935 : Rs. 11,14,741.

BRANCHES :—

Madras Office :—

107, Armenian Street.

Bazaar Branch :—

260, China Bazaar Road.

Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.

SUB OFFICES:—

Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.

All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.

S. N. N. SANKARALINGA IYER,

Managing Director,

107, Armenian Street, Madras.

ஐந்து வயதில் பண்டிதை:—ஜோட்பூரிலிருக்கும் மௌல்வி அல்லாபக்ஷ் ஹஸ்னி என்பவர் தமது 5-வயது மகள் ஸபீதாவுடன் பம்பாய் "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆபீசுக்குச் சென்றிருந்தார். அப் பெண் 3½ வயதில் திருக்குர் ஆன் முழுவதையும் படித்து முடித்துவிட்டாள் என்றும், இப்போது அப்பெண் அரபி, ஹிந்தி, பாரசீகம், உர்தூ ஆகிய பாஷைகளை நன்றாகப் படிக்கும் சக்திவாய்ந்தவளாக இருக்கின்றாளென்றும் அந்த மௌல்வி சாஹிப் கூறியதை முதலில் அவர்கள் நம்பவில்லை. பின்னர்ப் பார்சி நூலொன்றைக் கொண்டுவந்து ஸபீதாவிடம் கொடுத்தபோது அந்தப் பெண் அந்நூலின் பல பக்கங்களில் காட்டப்பட்ட விஷயங்களை யெல்லாம் தெளிவாகப் படித்துவிட்டாள். அப்புறம் உர்தூ தினசரிப் பத்திரிகையொன்றை அவளிடம் கொடுத்தபோது, அதிலிருந்த செய்திகள் பலவற்றையும் அவள் திருத்தமாக வாசித்தாள். வாசிப்பது மட்டுமின்றி, வாசிக்கும் விஷயங்களை அவள் நன்றாக உணர்ந்துகொள்வதாகவும் தெரிந்தது.

* * *

சாதுவின் அற்புதம்:—வடக்கே மார்வாரில் விஜய சாந்தி சூரே சுரஜி யென்ற சாதுவுக்கு மரியாதையாயொரு வியாபாரி ஒரு பெரிய விருந்து வைத்தார். அப்பொழுது ஆயிரம் பேர்களை அழைத்திருந்தார். ஆனால், சாதுவைத் தரிசிப்பதற்காக ஐயாயிரம் பேர்களுக்குமேல் வந்துவிட்டார்கள். வியாபாரி யோசனை செய்தார். சாதுவோ கவலைப்படவேண்டா மென்று சொன்னார். விருந்தில் உணவு பறிமாறியபொழுது ஐயாயிரம் பேருக்கும் போக உணவு விஞ்சவும் செய்ததாம்.

* * *

திருட்டு விநோதம்:—பிரஞ்சிந்தியா சந்திர நாகூரிலிருந்து பிட்ரிடிஷ்இந்தியாவுக்குத்திருட்டுத்தனமாகப்பட்டு முதலிய சரக்குக்களைக் கொண்டுவருகிறவர்கள் விநோதமான காரியங்களைச் செய்கிறார்கள். பட்டைச் சிறுவர்கள் இடுப்பில் சுற்றி ஏராளமாகக் கொண்டு வருகிறார்கள். சங்கூதிக்கொண்டு ஒரு பாடை வந்தது. சந்தேகத்தின்மீது அதனை நிறுத்தியபொழுது துக்கமாக வந்தவர்கள் அனைவரும் மூலைக்கு ஒருவராக ஓடிவிட்டார்கள். பாடையில் பிரேதத்திற்குப் பதில், சில பட்டு மூட்டைகள் இருந்தன. ஒரு மேளகார கோஷ்டி வந்தது. தவில் ஓசை புதுமையாயிருந்தது. தவிலுக்குள் பட்டு நிறைந்திருந்தது. பாற்குடங்களுக்குள்ளும் வாழைத்தண்டுகளுக்குள்ளும் பட்டை வைத்துக்கொண்டு போகிறார்கள். மோட்டார் வண்டிகளில் செல்லும் சீமாட்டிகள் போன்றவர்கள் மூன்று பட்டுப் புடவைகளை ஒரே புடவை போலக் கட்டிக்கொண்டு போகிறார்களாம்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! **" காம சாஸ்திரம் "** இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)